# பருதோல்வியில் பரம நோக்கம்

சகரியா பூணன்

"மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் திரும்ப நம்மேல் இரங்குவார்!" - மீகா 7:18,19.

* ஆறாம் பதிப்பு (2017)

## மீட்பின் பாதைக்குள் ....

1. தோல்வியிலும் தேவனுடைய நோக்கம் - 5

2. தோல்வியின் பாதையில் ஜெயத்தின் கெம்பீரம் - 44

**படுதோல்வியில் பரமநோக்கம்** (THE PURPOSE OF FAILURE) - 2000

Copyright - ZAC POONEN

*இந்த புத்தகம் பதிப்புரிமை பெற்றுள்ளது. இந்த பணியின் எந்த பகுதியும் மறுபதிப்போ அல்லது எந்த ரூபத்திலும் கடத்தல் கூடாது. அதாவது, பதிப்பாளர் எழுதித்தந்த அனுமதி இல்லாமல் மின்னனு சாசனமோ அல்லது எந்திர சாசனமோ (ஜெராக்ஸ் உட்பட) பதிவு செய்தல் கூடாது.*

**மேலும் விபரங்களுக்கு**
Christian Fellowship Centre
#69, Bellahalli, Kannur Post,
Bengaluru – 562149, Karnataka, India
email: cfc@cfcindia.com

**தோல்வி என்னும் படுகுழியில்**
**துவண்டு விழுந்தவர் ஏராளம்!**
**அதில் உழன்று.... உழன்று,**
**எஞ்சிய தங்களின் விசுவாசத்தை**
**இழந்தவரும் அநேகர்!**

*அந்த தோல்வியிலும்,*
*தேவனை சந்தித்து*
*தாழ்மையின், பொறுமையின்....*
*பாடங்களைக் கற்று*

**"ஒழிந்திடாத விசுவாசத்தோடு"**
**ஓங்கி வளர்ந்து, தேவன் விரும்பிய**
100 % **பலனை பெற்றிட்ட**
**பரிசுத்தவான்களோடு நீங்களும்**
**பங்கு பெற்றிட ஆயத்தமா?**

## 1

# தோல்வியிலும் தேவனுடைய நோக்கம்

பேதுருவுக்கு வர இருக்கும் ஒரு பெரிய அபாயத்தை இயேசு சுட்டிக்காட்டி, "சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல சாத்தான் உன்னைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான். நானோ **உன் விசுவாசம் ஒழிந்து போகாத படிக்கு** உனக்காக வேண்டிக் கொண்டேன்; நீ குணப் பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" என எச்சரித்துக் கூறினார் (லூக்கா. 22:31-32).

இருப்பினும், அந்த இரவில்தானே, பேதுரு தன் ஆண்டவரை மூன்றுதரம் மறுதலித்தான் என்பதை நாம் யாவரும் அறிந்திருக்கிறோம். இதை இயேசுவே பேதுருவுக்கு முன்னறிவித்து, "பேதுருவே, இன்றைக்குச் சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக் கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன்" என கூறியிருந்தார் (லூக்கா 22:34).

இந்த நிகழ்ச்சியின் மூலமாய் "மனுஷனுடைய தோல்வியில் தேவன் கொண்டுள்ள நோக்கம் என்ன?" என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள நான் விரும்புகிறேன். ஆம், தோல்வியினிமித்தம் துவண்டு சோர்ந்து போயிருக்கும் நம் யாவருக்குமே இந்தச் செய்தியானது புதிய நம்பிக்கையைத் தந்தருளி ஊக்கு விக்கும் என நான் நிச்சயித்திருக்கிறேன்.

இச்சமயத்தில் நம் உள்ளத்தில் எழும் முதல் கேள்வி: "தோல்வியை தேவனே அனுமதிக்கிறாரா? அந்தத் தோல்வியில் ஏதேனும் நோக்கம் இருக்கிறதா? அல்லது தேவனுடைய பரிபூரண சித்தத்தில், தோல்வி ஏற்பட்டால் அதில் எந்த நோக்கமும் இல்லாமல்..... இனி அடுத்து, அவருடைய நோக்கங்கள் தடைபட்டுப் போய்விடுமா?"

இவ்வாறு கேள்வி நமக்குள் எழுந்தாலும், இந்த வசனத்தில், பேதுரு தன் ஆண்டவரை மறுதலித்திட தேவன் தடை செய்யவில்லை என்றல்லவா காண்கிறோம்! ஏனெனில், இயேசு பேதுருவைப் பார்த்து, "சீமோனே, நான் உனக்காக வேண்டிக் கொண்டபடியால், நீ என்னை ஒருதடவைகூட மறுதலித்திடமாட்டாய்!" எனக் கூறவில்லையே? பேதுரு வீழ்ச்சியடைந் தாலும், **அவனுடைய விசுவாசம்** ஒழிந்து போகக்கூடாது என்பதற்காக மாத்திரமே ஆண்டவர் ஜெபித்தது ஏன்?

"நாம் ஒருபோதும் வீழ்ச்சியடையவே கூடாது" என ஆண்டவர் நமக்காக ஜெபித்திடவே நம்மில் பலர் விரும்புகிறோம். ஆம், ஆண்டவர் நம்மைப் பார்த்து "என் மகனே, என் மகளே, நீ ஒருபோதும் வீழ்ச்சி யடையவே கூடாது என்றே நான் உனக்காக ஜெபிக்கிறேன்" என கூறும்படியே நாம் விரும்புகிறோம். ஆனால், இதுபோன்ற ஜெபத்தை ஆண்டவர் நமக்காக ஜெபிப்பதில்லை என அறிவது நமக்கு மிகுந்த ஆச்சரியத்தையே தருகிறது!!

அப்படியானால், இயேசு சீமோனுக்காக என்னதான் ஜெபித்தார்? பேதுரு, சோதனையில் வீழ்ச்சியடையக்கூடாது என்பதற்காக ஜெபிக் காமல், அவன் வீழ்ச்சியடைந்தவுடன், **தேவனுடைய சம்பூர்ண அன்பில் அவன் கொண்ட விசுவாசம் அவனைவிட்டு ஒழிந்து போகக்கூடாது** என்பதற்காகவே ஜெபித்தார்! அதாவது, பேதுரு வீழ்ச்சியின் படுகுழியில் விழுந்தாலும், "தேவன் என்னை இன்னமும் அன்புகூருகிறார்!" என பேதுரு அறிக்கை செய்வதே அதன் பொருளாகும்.

இதுதான் விசுவாசம்! ஆம், இந்த அறிக்கையைத்தான் நாம் எப்போதும் நம் உதடுகளிலும், நம் இருதயத்திலும் கொண்டிருக்க வேண்டும்!! எத்தனை ஆழத்தில் அமிழ்ந்து, எவ்வளவு பெரிய படுகுழியில் வீழ்ந்தாலும் "நாம் இருக்கும் வண்ணமாகவே, தேவன் நம்மைத் தொடர்ந்து நேசிக்கிறார்!" என்பதே அந்த அறிக்கையின் முழக்கமாகும்!!

இந்த அறிக்கையைத்தான் கெட்டகுமாரன் கொண்டிருந்தான். இதைவிட வீழ்ச்சி ஏதும் இல்லை எனக்கூறும் அளவிற்கு அவன் வீழ்ச்சி அடைந்தபோதும், **தன் தகப்பன் இன்னமும் தன்னைத் தொடர்ந்து நேசித்துக் கொண்டுதான் இருக்கிறார்** என்பதை அவன் தன் இருதயத்தில் ஆழமாய் விசுவாசித்திருந்தான். வீழ்ச்சியின் அகோரத்தில் "பன்றியின் உணவை" தின்னும் அளவிற்கு நம்மில் ஒருவரும் அத்தனை மோசமான வீழ்ச்சியை அடைந்திருக்கவே மாட்டோம் என்றே நான் எண்ணுகிறேன். ஆனால், அவனோ வீழ்ச்சியின் படுபாதாளத்தை அடைந்தபோதும் "என் தகப்பன் இன்னமும் என்னை நேசிக்கிறார்!" என்பதை மனதார நினைவுகூர்ந்தான். அப்படி இல்லையென்றால், அவன் ஒரு போதும் தன் வீட்டிற்குத் திரும்ப வந்திருக்கவே மாட்டான்! ஒருவேளை, அவனுடைய தகப்பன் இறந்து விட்டதாகவும் ..... இப்போது வீட்டைத் தன் மூத்த சகோதரனே நடத்திக்

*கொண்டிருப்பதாகவும் இவன் கேள்விப்பட்டிருந்தால், அவன் வீட்டிற்குத் திரும்ப வந்திருப்பான் என நீங்கள் நினைக்கிறீர்களா? நிச்சயமாய் அவன் திரும்ப வந்திருக்கமாட்டான்! ஏனென்றால், தன் மூத்த சகோதரன் எப்படிப்பட்டவன் என்பதை அவன் நன்கு அறிந்து வைத்திருந்தான்!! ஆகவே, அவன் ஒருக்காலும் வீட்டிற்குத் திரும்ப வந்திருக்கமாட்டான். ஆனால்,* **தன்னை நேசிக்கும் தகப்பன்** *அங்கிருப்பதை அவன் அறிந்த படியினால்தான் அவன் திரும்ப வந்தான்!!*

*சில சபைகளில், பின்மாற்றமடைந்த பாவிகள் திரும்ப வருவதே யில்லை! ஏனென்றால், இந்த கெட்டகுமாரன் உவமையில் வரும் மூத்த சகோதரன் போலவே அங்குள்ள பாஸ்டரோ அல்லது மூப்பரோ இருப்பதாக இவர்கள் உணர்வதே அதற்குக் காரணமாகும். காரியம் அவ்வாறாக இருக்கும்பட்சத்தில், அந்த பின்மாற்றக்காரர்களை நீங்கள் ஒருக்காலும் குற்றப்படுத்தவே முடியாது! ஆனால், ஒரு சபையின் மூப்பன் அந்த தகப்பனைப்போல் இருந்தால், எவ்வளவு மோசமான பாவிகூட, இயேசுவிடத்தில் செல்வதுபோல், இரட்சிப்பைத்தேடி சபைக்குத் திரும்ப வருவார்கள்! ஆம், "எவ்வளவு மோசமான பாவியும் சபைக்கு மனதார வரமுடியும்" என்பதே நம் சபையைக் குறித்த எண்ணமாய் இருக்க வேண்டும்! மெய்யாகவே இயேசு நம் நடுவில் இருந்தால், மோசமான பாவிகளும் இரட்சிப்பைப் பெறும்படி அவரிடம் நிச்சயம் வருவார்கள்.*

*ஆகவே, படுமோசமாய் தோல்வியடைந்து, குன்றின் ஆழத்தில் விழுந்து தங்கள் ஜீவியத்தைத் தாறுமாறாக்கிக் கொண்ட* **யாவருக்கும்** *இப்போது நிச்சயமாய் நம்பிக்கை இருக்கிறது! ஆம், அந்தப் பாதாளத் திலிருந்து ஆண்டவர் உங்களைத் தூக்கி எடுத்து, மகிமையின் உன்னத நிலைக்கு உங்களை உயர்த்திட அவரால் நிச்சயமாய் முடியும்!! அவர் நமக்காக ஜெபிக்கும் ஜெபமெல்லாம், "தேவனுடைய அன்பில் நாம் கொண்ட விசுவாசம் எச்சமயத்திலும் ஒழிந்து போகவே கூடாது" என்பதேயாகும்!*

*இந்த செய்தி, "இன்று" உங்களுக்குத் தேவையில்லாதது போல் தோன்றலாம்! ஆனால், அன்பார்ந்த சகோதரனே சகோதரியே, இனிவரும் காலத்தில் என்றாவது ஒருநாள் "நீங்கள் பாறையின் ஆழத்தில் விழும் சமயத்தில்" இந்தச் செய்தி நிச்சயம் உங்களுக்குத் தேவையாய் இருக்கும். அந்த நாளில், "ஒன்றை மாத்திரம்" நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: நீங்கள் எவ்வளவு இழிவான வீழ்ச்சியடைந்திருந்தாலும்* **"தேவன் தொடர்ந்து உங்களை நேசிக்கிறார்"** *என்பதேயாகும். ஆம், அந்த நாளில் தேவனுடைய அன்பில் நீங்கள் கொண்ட விசுவாசம் ஒழிந்து போகாதிருக்கக்கடவது!!*

*எந்த நிலையிலும் தேவன் நம்மை நேசிக்கிறார் என நம்புவதே விசுவாசத்தின் அடிப்படையாகும்! அவர் நம் பாவத்தை நேசிப்பதில்லை,*

நம் பாவத்தில் தொடர்ந்து ஜீவிப்பதையும் விரும்புவதில்லை! வியாதிப் பட்ட தன்னுடைய பிள்ளையை ஒரு தகப்பன் பார்ப்பது போலவே தேவனும் நம்மைப் பார்க்கிறார். அந்த தகப்பன், அக்கொடிய வியாதியை வெறுக்கிறான், தன் பிள்ளையையோ நேசிக்கிறான்! முற்றிலும் குஷ்டரோகம் பிடித்த அல்லது சயரோகம் பிடித்த ஒரு பிள்ளையை ஒரு தாய் பார்ப்பதாக எண்ணிப்பாருங்கள். அந்தத் தாய், தன் பிள்ளையை அதிகமாய் நேசித்தபோதும், அந்த வியாதிகளையோ தன் முழு இருதயமாய் பகைத்திடுவாள். அதுபோலவே, தேவனும் பாவிகளை நேசித்து, அவர்களின் பாவத்தையோ வெறுக்கிறார்!!

கல்வாரி சிலுவையில், தேவன் பாவிகள்மீது கொண்ட அன்பையும், பாவத்தின்மீது அவர் கொண்ட வெறுப்பையும் நாம் காண்கிறோம். சிலுவையில் இயேசு மரிப்பதற்கு தேவன் அனுமதித்ததில், **அவர் பாவிகள்மீது கொண்ட அன்பு** வெளியரங்கமானது! அந்த சிலுவையில் இவ்வுலகத்தின் பாவத்தை இயேசு சுமந்தபோது, தேவன் தன் முகத்தை அவரிடமிருந்து மறைத்துக் கொண்டதில், **பாவத்தின்மீது அவர் கொண்ட வெறுப்பும்** வெளியரங்கமானது!!

சில சமயங்களில், “ஓர் அன்பின் தேவன் ஜனங்களை நரகத்திற்கு அனுப்புவாரா?” என சிலர் கேட்பதுண்டு. ஆனால், நரகம் என்றால் என்ன தெரியுமா? “தேவனே இல்லாத ஒரு இடமும், தேவனால் முற்றிலும் கைவிடப்பட்ட ஓர் ஸ்தலமே” நரகமாகும்! ஆனால், இந்த பூமி தேவனால் கைவிடப்படவில்லையே? ஆகவேதான், இந்த பூமியில் இன்னமும் ஏராளமான நன்மைகளும், சௌந்தர்யமும் இருப்பதை நாம் காண்கி றோம். உதாரணமாய், அவருடைய சிருஷ்டிப்பை சற்று ஏறிட்டுப் பாருங்கள்! மனுஷர்களிடம் பிரதிபலிக்கும் நற்பண்பையும், ஒழுக்கத் தையும் பாருங்கள்!! **எல்லா மனுஷரையும்** பிசாசுகள் பிடித்துக் கொள்ளவே விரும்புகின்றன. ஆனால், அவ்வாறு செய்திட அவைகளால் முடிவதில்லை. ஏனென்றால், பிசாசுகள் தாங்கள் விரும்பியபடியெல்லாம் செய்வதற்குத் தடைசெய்யும்படி தேவன் ஜனத்தை சூழ ஓர் எதிர்ப்புச் சுவரை எழுப்பி யிருக்கிறார். தேவனுடைய இரக்கமே, மனுஷனுக்கு நல்ல சுகத்தையும், செல்வத்தையும், வசதிகளையும் அருளியிருக்கிறது. இந்த ஆசீர்வாதங்கள் அனைத்தையும், நல்லோர்க்கும்-பொல்லோர்க்கும் ஆகிய இருவருக்குமே தேவன் பொழிந்திருக்கிறார். இவையாவும், தேவன் இந்த உலகத்தை இன்னமும் கைவிடவில்லை என்பதையே நிரூபிக்கின்றன. ஆனால், நரகமோ அப்படியில்லை! நரகத்தில் ‘இரக்கம்’ என்பது ஒரு துளிகூட இருப்பதில்லை! ஏனென்றால், நரகமானது மெய்யாகவே தேவனால் கைவிடப்பட்டதோர் கொடிய ஸ்தலமாகும்!!

இவ்வுலகத்தில், குணப்படாத ஏராளமான ஜனங்களிடமும் நற் பண்புகள் இருக்கத்தான் செய்கிறது. ஏனென்றால், அவர்கள் மீது தேவனுடைய ஆதிக்கம் இன்னமும் இருப்பதாலேயே ஆகும். ஆனால்,

இவர்கள் நரகத்திற்குச் சென்ற அடுத்தகணமே, நற்குணவான்களைப் போல் காணப்பட்ட இதே ஜனங்கள் உடனடியாக பிசாசைப் போலவே தீயவர்களாய் மாறிவிடுவார்கள்! ஆம், அவர்கள்மீது படர்ந்திருந்த தேவ இரக்கம் அவர்களைவிட்டு எடுபட்டதே அதற்கு காரணமாகும்!

"தேவனால் முற்றிலும் கைவிடப்படுவது எப்படியிருக்கும்?" என்பதை நரகத்தில்தான் ஜனங்கள் அனுபவிப்பார்கள்! ஆனால், அந்த அனுபவத்தை இயேசுவோ சிலுவையிலேயே அனுபவித்தார்!! தேவன் மெய்யாகவே இயேசுவைக் கைவிட்டபோது, காரிருள் சூழ்ந்த அந்த மூன்று மணிநேர வேளையில் இயேசு நரகத்தை அந்த சிலுவையின்மீது அனுபவித்தார். இங்குதான், தேவன் எவ்வளவாய் பாவத்தை வெறுக்கிறார் என்பதை நாம் காணமுடிகிறது.

ஆகவே, "ஓர் அன்பின் தேவன் ஜனங்களை நரகத்திற்கு அனுப்புவாரா?" என்ற கேள்விக்கு என்ன பதில்? அந்த பதில், அடுத்த கேள்வியிலேயே அடங்கியிருக்கிறது: "இவ்வுலகத்தின் பாவம் இயேசுவின் மீது சுமத்தப்பட்டபோது, ஓர் அன்பின் தேவன் தன் சொந்தக் குமாரனே நரகத்தை சிலுவையில் அனுபவிக்க அனுமதிப்பாரா?" அவ்வாறு அவர் அனுமதிப்பாரென்றால், அவர் ஜனங்களை நரகத்திற்கு அனுப்பவும் செய்வார்!! தங்கள் பாவத்தில் தொடர்ந்து ஜீவித்துக்கொண்டு, தேவனை நோக்கி, "நான் உமக்குச் செவிகொடுக்கப்போவதில்லை. என் இஷ்டமான வழியை நானே தெரிந்துகொண்டு, அந்த வழியிலேயே தொடர்ந்து எப்போதும் ஜீவிப்பேன்" எனக் கூறுபவர்களிடம், ஓர் அன்பின் தேவன் நிச்சயமாய் தன் முகத்தை அவர்களைவிட்டுத் திருப்பிவிடுவார்!!

விரிவாக்கம் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பில், நீதி.29:1-ம் வசனத்தை வேதம் இவ்வாறு கூறுகிறது, "அனேகம் தடவைகள் திரும்பத் திரும்ப புத்தி சொல்லப்பட்டும், அந்த **புத்திமதியை ஏற்றுக் கொள்ள மறுப்பவன்,** ஒருநாள் சடிதியில் நாசமடைவான்! அவனுக்கு, அடுத்து ஒரு கடைசி சந்தர்ப்பம் என்றுகூட தரப்படுவதில்லை." ஆம், தேவனுடைய அன்பான அழைப்பை திரும்பத் திரும்ப மறுப்பவன், மெய்யாகவே கொடிய அபாயத்தில் இருக்கிறான்!!

இப்போது இந்த சத்தியங்களைக் கேட்டதினிமித்தம், கூர்மையான - உணர்வுகள் கொண்ட சகோதர, சகோதரிகள் குற்ற உணர்வு அடைந்திட நான் விரும்பவில்லை. ஏனென்றால், மேற்கண்ட சத்தியம் பாவத்தில் **வீழ்ச்சியடைந்தவர்களுக்காக எழுதப்படவே இல்லை!** மாறாக, **பாவத்தை நேசித்து** அதில் **தொடர்ந்திருக்க** விரும்புபவர்களை எச்சரிப்பதற்கே எழுதப்பட்ட வசனங்களாகும்!! பரிசுத்த ஜீவியத்திற்காக முயற்சித்து வீழ்ச்சியடைபவர்களுக்கு இந்த வசனம் நிச்சயமாய் எழுதப்படவில்லை என்பதை தயவுசெய்து அறிந்துகொள்ளுங்கள். ஆம்,

**முரட்டாட்டம் செய்து,** தேவனை அவமதித்து, **பாவத்தைத் தொடர்ந்து செய்திட விரும்புபவர்களுக்கே** இவ்வசனங்கள் எழுதப்பட்டது என்பதை அறிந்திருக்கக்கடவோம்!!

அப்படியானால், நான் "முரட்டாட்டக்காரனா" என்பதை எப்படி அறிந்துகொள்ளலாம்? "நான் மனந்திரும்பி, தேவனிடம் திரும்பி வருவதற்கு எனக்குள் **விருப்பம்** இருக்கிறதா?" என்ற கேள்வியை உங்களுக்குள் கேட்டுப் பாருங்கள். நீங்கள் தேவனிடம் மீண்டும் திரும்ப வந்து, அவரை நேசித்திட **"சிறிதளவு" விருப்பம்** உங்களுக்குள் இருந்தாலும்.... பரிசுத்தாவியானவர் உங்கள் வாழ்க்கையில் இன்னமும் கிரியை செய்து கொண்டிருக்கிறார் என்பதற்கும், உங்களைத் தம்மிடம் சேர்த்துக்கொள்ள தேவன் வாஞ்சிக்கிறார் என்பதற்கும் அதுவே உறுதியான நிரூபணமாகும்! ஒருவேளை நீங்கள், ஒரு தோல்வியின் மொத்த ரூபமாயிருக்கலாம், ஆனால்..... நீங்கள் நிச்சயமாய் "முரட்டாட்டம்" உள்ளவர் அல்லவே அல்ல! ஆம், தோல்வியடைந்தவருக்கும், முரட்டாட்டம் செய்பவருக்கும் இடையே பெருத்த வித்தியாசம் இருக்கிறது.

பேதுரு வீழ்ச்சியடைய தேவன் அனுமதித்ததற்கு இதுவே அவரின் நோக்கமாகும் . . . அதாவது, பேதுரு "புடைக்கப்பட" வேண்டும்! உண்மையில் சாத்தான், பேதுருவை அழித்திடவே விரும்பினான். ஆனால், அதற்கு தேவன் அனுமதிதரவேயில்லை. நம் திராணிக்கு மேலாக சோதிக்கப்படுவதற்கும், பரீட்சிக்கப்படுவதற்கும் தேவன் ஒருபோதும் இடங்கொடார்!! பேதுருவை புடைத்திட மாத்திரமே சாத்தான் அனுமதி பெற்றான்.

**இந்தத் தோல்வியென்னும் "படைப்பில்" பேதுருவின் ஜீவியத்திலிருந்த ஏராளமான "பதருகள்" அகற்றப்பட்டு, அவன் சுத்திகரிக்கப்பட்டான்! ஆம், நாம் தோல்வியடைய தேவன் அனுமதிப்பதற்கு மெய்யான நோக்கம் இதுவேயாகும்!!**

இவ்வாறு பதருகள் நம் ஜீவியத்திலிருந்து அகற்றப்படுவது நல்லது தானே? நிச்சயமாய் நல்லதுதான், இதிலென்ன சந்தேகம்!? ஒரு விவசாயி தன் நிலத்தில் கோதுமை அறுவடை முடிந்தவுடன், **அக்கோதுமை மணிகளைப் பயன்படுத்துவதற்கு முன்பாக** அதை அவன் கண்டிப்பாய் புடைக்க வேண்டும். அப்போதுதான் "பதருகள்" அக்கோதுமை மணிகளிடமிருந்து பிரிக்கப் பட முடியும்!

இவ்வாறாகவே, நம் ஜீவியத்திலிருக்கும் பதருகளைப் போக்கு வதற்கும் ஆண்டவர் இந்த **சாத்தானையே உபயோகிக்கிறார்.** இந்த நோக்கத்தை, நம்மைத் திரும்பத்திரும்ப வீழ்ச்சியடையச் செய்வதின் மூலம் தேவன் நிறைவேற்றுகிறார் என்பதை நாம் அறிந்துகொள்வது, நமக்கு மிகுந்த ஆச்சரியத்தையே தருகிறது. பேதுருவில் இந்த நோக்கம் நிறைவேறுவதற்குத் தேவன் சாத்தானை உபயோகித்தார் . . . இப்போது நம் ஜீவியத்தில் அவரது நோக்கம் நிறைவேறுவதற்கும் இந்த சாத்தானையே உபயோகிக்கிறார். நம் எல்லோரிடமும் பெருமையின்

*பதர்;சுய-நம்பிக்கையின் பதர்; சுய-நீதியின் பதர் என ஏராளமான பதருகள் இருக்கின்றன. இந்தப் பதருகள் அனைத்தையும் அகற்றி நம்மைச் சுத்திகரிப்பதற்குத் தேவன் சாத்தானைப் பயன்படுத்தி, நாம் திரும்பத் திரும்பத் தோல்வியடையும்படி செய்கிறார்!*

*தம்முடைய இந்த நோக்கத்தை உங்கள் ஜீவியத்தில் நிறைவேற்று வதில் ஆண்டவர் சித்திபெற்றரா? இல்லையா? என்பது உங்களுக்கு மாத்திரமே தெரியும்! ஆனால், பதருகள் உங்களிடம் அகற்றப்பட்டுக் கொண்டேயிருந்தால், நீங்கள் மெய்யாகவே அதிகமதிகமாய் தாழ்மை யுள்ளவர்களாயும், வெகு குறைவாய் சுய-நீதியுடையவர்களாயும் மாறுவீர்கள். ஆம், தோல்வியடையும் மற்றவர்களையோ நீங்கள் ஒரு போதும் அற்பமாய் எண்ணவேமாட்டீர்கள். மேலும், உங்களை ஒருபோதும் மற்றவர்களைவிட மேன்மையாகவும் எண்ணமாட்டீர்கள்!*

*நான் முதலில் குறிப்பிட்டதுபோல், நாம் திரும்பத் திரும்ப தோல்வியடைய தேவன் அனுமதித்து, நம்மிடமுள்ள பதருகளைச் சாத்தான் புடைத்து அவைகளை அகற்றும்படியே செய்கிறார். ஆகவே நீங்கள் தோல்வியடைந்ததனிமித்தம் ஒருபோதும் சோர்ந்துபோகவே வேண்டாம்! நீங்கள் தொடர்ந்து தேவனுடைய கரத்தில்தான் இருக்கிறீர்கள். உங்களுடைய தொடர்ச்சியான தோல்விகளில்* **தேவனுடைய மகிமையான நோக்கம்** *உங்களுக்குள் நிறைவேறிக்கொண்டு இருக்கிறது!! ஆனால், இதுபோன்ற நேரங்களில், உங்கள்மீது தேவன் வைத்திருக்கும் அன்பில் கொண்ட உங்கள் விசுவாசம் மாத்திரம் ஒருபோதும் ஒழிந்து போகாதிருக்கக்கடவது! அதற்காகத்தான் இயேசு* **பேதுருவுக்காக** *ஜெபித்தார் . . . இன்று "அதற்காகவே" அவர்* **நமக்காகவும்** *ஜெபித்துக் கொண்டிருக்கிறார். ஆம், நாம் ஒருபோதும் வீழ்ச்சியே அடையக்கூடாது என அவர் ஜெபிக்காமல், பாறையின் பாதாளத்தில் போய் விழுந்தாலும் தேவனுடைய அன்பில் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை தளர்ந்துவிடக்கூடாது என்பதற்காகவே ஜெபிக்கிறார்.*

*இவ்வாறு, ஏராளமான வீழ்ச்சியின் அனுபவங்கள் வழியாகவே நாம் கடைசியில்* **"பூஜ்ஜிய நிலைக்கு"** *வந்து, அங்கு மெய்யாகவே நொறுங்கு கிறோம்! இந்த நிலையை பேதுரு அடைந்த பிறகுதான், அவனுக்குள் அந்த "இரண்டாவது மனந்திரும்புதல்" உண்டானது (லூக்.22:32). ஆம், அவன் "முற்றிலுமாய் திரும்பிவிட்டான்." இவ்வாறு, பேதுருகுன்றின் பாதாளத்தில் வீழ்ச்சியடைந்தவுடன் "முற்றிலுமாய் திரும்பியதே"* (TURNED AROUND), *இயேசு பேதுருவுக்காக ஜெபித்த ஜெபத்திற்குப் பதில் கிடைத்ததின் நிருபணமாயிருக்கிறது. பேதுரு, அந்த வீழ்ச்சியில் உழன்று மனம் சோர்ந்து விடவில்லை. தன் விசுவாசத்தையும் இழந்துவிடவில்லை. அவன் மீண்டும் குதித்து எழுந்து நின்றான்! வீழ்ச்சியின் நீண்டதூரத்திற்கு பேதுரு செல்லும் படி தேவன் அனுமதித்தார் . . . ஆனால், பேதுரு அந்த நீண்ட கயிற்றின் கடைசி முனைக்குச் சென்ற அடுத்த கணமே, தேவன் அக்கயிற்றை இழுத்து*

*அவனைத் தன்னிடம் சேர்த்துக்கொண்டார்!*

*நாம் தேவனுடைய பிள்ளையாய் இருப்பது, நாம் பெற்ற சிலாக்கியம் என்றே சொல்லவேண்டும். தம்முடைய பிள்ளையாய் அவர் நம்மைத் தெரிந்துகொண்ட அடுத்த கணமே, நம்மைக் காக்கும்படி ஒரு கயிற்றை நம்மைச் சுற்றி தேவன் வைக்கிறார். அந்தக் கயிறு ஏராளமான தளர்வுகள் கொண்ட ஓர் நீண்ட கயிறு ஆகும். ஆகவே, நீங்கள் பலஆயிரம் தடவைகள்கூட வீழ்ச்சியடையவும்...... ஆண்டவரின் கையிலிருந்து வெகுதூரமாயும் சென்றுவிட முடியும்! அவ்வித வீழ்ச்சியின் அனுபவங் களில், ஒரு நாள்...... கயிற்றின் தளர்ச்சி முடியும் கடைசி முனையை நீங்கள் அடைந்துவிடுவீர்கள்! ஆம், அப்போதுதான் தேவன் தன் ஆதிக்கத்தி லுள்ள கயிற்றை இழுத்து மீண்டும் உங்களைத் தன்னண்டை வரும்படிச் செய்துவிடுவார்!!*

*அவ்வாறு கயிற்றின் கடைசி முனையை நீங்கள் அடையும் சமயத்தில், கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடிவிட உங்களால் முடியும் என்பது உண்மைதான்! அதேசமயம், நீங்கள் தேவனுடைய காருண்யத்தை நினைவுகூர்ந்து . . . நொறுங்குண்டு . . . மனதுயரத்துடன் அவரிடம் திரும்ப வருவதற்கும் நீங்களே தெரிந்துகொள்ள முடியும்!! அதைத்தான் பேதுரு செய்தார். அவர் மனங்கசந்து அழுது ஆண்டவரிடம் திரும்பி வந்தார். ஆனால், இதே செயலை யூதாஸ்காரியோத்து செய்யவில்லை. அவனோ, தன் ஜீவியத்தின்மீது தேவன் கொண்டிருந்த ஆளுகைக்கு எதிராக முரட்டாட்டம் செய்து, கயிற்றை அறுத்துக்கொண்டு நித்தியமாய் தொலைந்து போனான்! ஆனால், இச்செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்களோ, பேதுரு செய்ததுபோலவே செய்வீர்கள் என்றே நிச்சயமாய் நம்புகிறேன்!*

*அடுத்த கட்டமாக இயேசு பேதுருவைப் பார்த்து கூறியது யாதெனில், "நீ குணப்பட்ட பின்பு (நீ திரும்பிவந்து பெலனடைந்த பின்பு) உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" (லூக்கா 22:32) என்றார்.* **நாம் இவ்வாறு நொறுங்குண்டு பெலனடைந்த பிறகே, பிறரை பெலப்படுத்தி அவர்களை ஸ்திரப்படுத்திட முடியும்!**

*ஆம், ஆவியில் நிறைந்து கர்த்தருக்குச் செய்திடும் ஊழியத்தின் ஆயத்தம் இந்த தோல்வியின் அனுபவத்தின் மூலமாகவே பேதுருவுக்கு உண்டானது என நாம் கூறலாம். இந்தத் தோல்வியின் அனுபவம் இல்லாமல், இந்தப் பேதுரு பரிசுத்த ஆவியினால் நிறைந்திருந்தால், அந்த பெந்தெகொஸ்தே நாளில் இந்தப் பேதுரு ஒரு* **பெருமையான மனிதனாகவே** *நின்றிருப்பான்! தோல்வியே அடையாத அந்தப் பெருமையான பேதுரு, பிறரை அற்பமாய் பார்த்து, தன் முன்னிருக்கும் பாவியான ஜனங்களை உதாசீனமும் செய்திருப்பான்!! பெருமையுள்ளவர்களைத் தேவன் எதிர்த்து நிற்கிறபடியால், இப்போது தேவன் பேதுருவுக்கு சத்துருவாயும் மாறியிருப்பார்!?*

இவ்வித துயர சம்பவம்தான், ஒருகாலத்தில் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட எண்ணற்ற கிறிஸ்தவர்களுக்குச் சம்பவித்திருக்கிறது. ஏனென்றால், அவர்களோ இன்னமும் நொறுங்கவில்லை!! அவர்கள் பெற்ற அபிஷேகம் மெய்யானதாய் இருக்கலாம், ஆனால் அவர்களோ இன்னமும் நொறுங்காமல் தான் இருக்கிறார்கள். ஆகவே, நொறுங்காத இவர்களின் பெருமையினிமித்தமாய் வெகுசீக்கிரத்தில் தாங்கள் பெற்ற அபிஷேகத்தையும் இழந்துபோகிறார்கள், ஆ இது பரிதாபம்!!

என்னுடைய சொந்த ஜீவியத்தில், தேவன் என்னைப் பரிசுத்த ஆவியினால் நிரப்புவதற்கு எவ்வளவோ காலங்களுக்கு முன்பாகவே, சிலுவையின் பாதையையும்; நொறுங்குண்ட ஜீவியத்தையும் எனக்குக் கற்றுக் கொடுத்தார். நான் வழிதவறிச் சென்றுவிடாதபடி, அது எனக்கு மிகவும் நல்லதாகவே அமைந்தது. ஆம், **தோல்வியின் பல ஆண்டுகள்** ஊடாய் என்னை தேவன் நடத்தி, என் சுய-நம்பிக்கையையும்; சுய-நீதியையும் தகர்த்தெறிந்தார். என் கடந்தகால 60 வருட ஜீவியத்தை ஓர் கணித-வரைபடத்தில் வரைந்தால் அது கீழ்கண்ட விதமாகவே இருக்கும்: நான் பாலகனாய் பிறந்தபோது, பாவமே செய்யாத கபடும் களங்கமும் அற்ற நான், வரைபடத்தில் உயர்நிலையில் இருந்தேன். என் 19 - வது வயதில் மறுபடியும் பிறந்தபோது, சில குறிப்பிட்ட வருடங்கள் வரை என் வரைபட உயர்வு சீராகவே இருந்தது. ஆ.... அதற்குப் பின்புதான் என் வரைபடம் மெதுவாக தாழ்வு நோக்கி இறங்கிச் சென்றது. அச்சமயத்தில் தேவன் என் ஊழியத்தை ஆசீர்வதித்து, கிறிஸ்தவ வட்டாரத்தில் நான் பிரபல்ய மானவுடன், பெருமை எனக்குள் ஏறி...... நானே அறியாதவகையில் என் ஆவிக்குரிய அந்த வரைபடம் வெகு தாழ்வாய் இறங்கத் தொடங்கியது. வெளிஉலகத்திற்கு நான் பிரசித்தி பெற்ற பிரசங்கி! ஆனால், என் உள்ளான - ஜீவியமும், தேவனோடு நான் கொண்டிருந்த உறவும் சீர்கெட்டதாய் மாறிக்கொண்டிருந்தது. அதாவது என் அந்தரங்க ஜீவியத்தில் நான் ஒரு பின் மாற்றக்காரனாகவே இருந்தேன். கடைசியாக...... என் வாழ்க்கை, குன்றின் பாதாளத்தில் விழுந்து அந்த வரைபடம் தாழ வீழ்ச்சியடைந்தது!

சுமார் 26 - வருடங்களுக்கு முன்பு அதுதான் என்னுடைய நிலை! அந்நிலையில், நான் என் ஊழியத்தையே விட்டுவிட தீவிரமாய் சிந்திக்க ஆரம்பித்தேன். ஏனென்றால், நான் கைக்கொள்ளாததைப் பிரசங்கித்துக் கொண்டு இன்னமும் ஜனங்களைத் தொடர்ந்து வஞ்சிக்க நான் துளியும் விரும்பவில்லை. அந்த நிலையில், என்னுடைய மாய்மாலத்திற்காகவும், என் பின்மாற்றத்திற்காகவும்...... நான் தேவனிடமிருந்து ஆக்கினையடைவது ஒன்றையே எதிர்நோக்கியிருந்தேன். ஆனால், இவ்விதமாய் நியாயந்தீர்த்து, என்னை நரகத்திற்கு அனுப்புவதற்கு பதிலாய், தேவன் என்ன செய்தார் தெரியுமா? "என்னை அவர் பரிசுத்த ஆவியினால் நிறைத்தார்!" அல்லேலூயா!!

இவ்வித ஆச்சரியமான செயலை தேவன் எதற்காக எனக்கு அப்படிச்

*செய்தார்? ஏனென்றால் "தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல" என்பதே இக்கேள்விக்கு விடையாகும். இந்த சத்தியத்தின் மகத்துவத்தை நீங்கள் நன்றாய் விளங்கிக் கொள்ள இன்னொரு திருஷ்டாந்தத்தை இங்கே நான் கூறுகிறேன்:*

*நீங்கள் ஒரு பன்னாட்டுக் கம்பெனியில் பணிபுரிவதாக எண்ணிக் கொள்ளுங்கள். ஆனால் நீங்களோ அந்தக் கம்பெனிக்கு உண்மை யற்றவர்களாய் நடந்து, அவர்களுடைய ஆணைகளுக்கு கீழ்படியாமல், கம்பெனி முதலாளிகளின் தயவை உங்கள் ஒழுங்கீனத்திற்குச் சாதகமாய் பயன்படுத்தி கம்பெனியின் பெயருக்கே பெருத்த இழுக்கை கொண்டு வந்துவிட்டீர்கள்! இந்நிலையில், ஒருநாள் மிகவும் மோசமான மற்றொரு செயலையும் நீங்கள் செய்துவிட்டீர்கள்!! இந்தச் செயல், கம்பெனிக்கு நீங்கள் செய்த அக்கிரமத்தை நிறைவடையச் செய்வதாய் அமைந்து விட்டது! இச்சமயத்தில், கம்பெனியின் சேர்மன் உங்களிடம் வருகிறார். ஆனால் ...... உங்களைக் கம்பெனியிலிருந்து தூக்கி எறிவதற்குப் பதிலாய்..... உங்களைப் பார்த்து "கம்பெனியில் நீங்கள் செய்த எல்லா அக்கிரமங் களையும் மன்னித்துவிட நாங்கள் முடிவு செய்துவிட்டோம்! அது மாத்திரமல்ல, இன்றிலிருந்து உங்களுடைய சம்பளத்தை நாங்கள் மூன்று மடங்காக உயர்த்தி விட்டோம்!!" எனக் கூறுகிறார். இதுபோன்ற ஒரு விந்தை செயல் எங்காவது சம்பவிக்கக்கூடுமா? இந்தக் கேள்விக்கு உங்களுடைய பதில் "அவ்வாறு ஒருக்காலும் நடந்திட முடியாது" எனக் கூறுவதாய் இருக்கிறதல்லவா!! இவ்வாறு நீங்கள் கூறிய பதில் எடுத்துரைக்கும் உண்மை யாதெனில், "தேவனுடைய வழிகள் மனுஷனுடைய வழிகள் அல்ல!" என்பதேயாகும். ஏனென்றால் சுமார் 25 - ஆண்டுகளுக்கு முன்பாக மனுஷருடைய வழிக்கு முரணான செயலையே தேவன் எனக்கும் செய்திருந்தார்!!*

*இவ்வாறு தேவன் எனக்குச் செய்த இந்த விந்தையான செயல், எனக்குள் என்ன விளைவைக் கொண்டுவந்தது? தேவன் என்மீது காட்டிய தயவை நான் சாதகமாய் எடுத்துக் கொண்டு, அந்த நாளிலிருந்து இன்னும் அதிகமாய் என்னைப் பாவம் செய்திட வைத்து விட்டதா? இல்லை..... அப்படி சம்பவிக்கவேயில்லை! அதற்கு மாறாக, அந்த அற்புதமான தேவதயவு நான் குணப்படும்படியே என்னை ஏவியது! (ரோமர் 2:4).*

**ஆம், தேவனுடைய சொல்லி முடியாத இந்த அன்பின் தயவு என்னை அதிகமாய் நொறுங்கச் செய்து, அன்றிலிருந்து அவருக்காக ஒர் தூய்மையான பரிசுத்த ஜீவியத்தைச் செய்யும்படியான வாஞ்சையைத்தான் எனக்குள் தூண்டியது!**

*இருப்பினும், இக்குறிப்பிட்ட சம்பவங்களை விவரிக்கும் நான், உங்களிடம் நேர்மையாய் நின்றிடவே விரும்புகிறேன்! ஏனென்றால், அந்நாளிலிருந்து என் ஜீவியத்தின் வரைபடப்புள்ளி (GRAPH) வீழ்ச்சியே யில்லாமல் மேல் நோக்கிச் சென்றதென என்னால் கூறிவிட முடியாது! ஆம்,*

எத்தனையோ பல போராடும் கிறிஸ்தவர்களைப்போலவே என் வாழ்க்கையிலும் உயர்வும், தாழ்வும் இருக்கத்தான் செய்தது!! பவுல் கூறியது போலவே, "புறம்பே போராட்டங்கள், உள்ளே பயங்கள்" எனக்குள்ளும் இருந்தது. "போராட்டத்தில் மனமடிந்தவர்களை ஆறுதல் செய்யும்" **சகோதரர்களின் உதவி** எனக்கு இன்னமும் தேவையாய் இருப்பதையே உணர்கிறேன்(2 கொரி.7:5,6), ஆகிலும் பூரணத்தை நோக்கிக் கடந்து செல்லவும் நான் அதிகமாய் பிரயாசப்படுகிறேன்.

தேவன் 'தனக்கேற்ற வழியில் என்னில் கிரியை செய்வதற்கு' நான் வீழ்ச்சியின் படுகுழியில் திரும்பத் திரும்ப விழும்படி என்னை அவர் அனுமதிக்கவேண்டியதாய் இருந்ததைக் கண்டேன். இவ்வாறு என்னை "நொறுங்குண்ட பூஜ்ய நிலைக்குக்" கொண்டுவர அவருக்குப் 16 - வருடங்கள் பிடித்தது! ஆனால் இந்த பூஜ்ய நிலையை அடைந்த போதோ எனக்கு 35 - வயதாகிவிட்டது!! ஆம், என் ஜீவியத்தின் பாதி வாழ்க்கை முடிவடைந்து விட்டது. என்னைப்போலவே உங்களுக்கும் இவ்வளவு காலம் பிடிக்கும் என நான் எண்ணவில்லை. ஏனென்றால் நீங்கள் என்னைப் போன்று "முரண்டு" செய்பவர்களாய் நிச்சயமாய் இருக்க மாட்டீர்கள்! நீங்கள் ஒருபோதும் நம்பிக்கையிழந்துவிடாதபடி உங்களை உற்சாகப்படுத்துவதற்கே என்னுடைய சாட்சியை இங்கே நான் கூறினேன். இத்தனை மோசமான என்னிடமே தேவன் தன் கிரியையை செய்திருக்க முடியுமென்றால், அதே கிரியையை உங்கள் யாரிடத்திலும் அவர் நிச்சயம் செய்திட முடியும்!!

**"நம்பிக்கையிழந்து போனவர்கள்" என இந்தப் பூமியில் ஒருவருமேயில்லை!** இதை மீண்டும் சற்று தெளிவாய் கேட்கிறீர்களா?..... "நம்பிக்கையிழந்து போனவர்கள்" என இந்தப் பூமியில் ஒருவருமேயில்லை!! நீங்கள் உயிரோடிருக்கும் வரைக்கும், உங்கள் யாவருக்கும் நிச்சயமாய் நம்பிக்கையுண்டு. நீங்கள் மரிக்கும்போது மாத்திரமே, நம்பிக்கை உங்களைவிட்டு விலகிச் செல்லும்!!

**நாமே பாதாளத்தின் வீழ்ச்சியில் கிடக்கும்போதுதான், அங்கே ஏற்கனவே வீழ்ச்சியில் இருக்கும் மற்றவர்களை நாம் ஒருபோதும் அசட்டை செய்திட மாட்டோம்!**

பாதாள வீழ்ச்சி அடைந்த பிறகு, இனியும் நாம் ஒரு போதும் எந்தப் பாவியையும் அல்லது எந்தப் பின்மாற்ற விசுவாசிகளையும் அல்லது வீழ்ச்சியடைந்த எந்தக் கிறிஸ்தவத் தலைவர்களையுமேகூட..... நாம் ஒருபோதும் இளப்பமாய் பார்த்திடவே மாட்டோம்! **இப்போது** நாம் பெற்றுவிட்ட "பாவத்தின் மேல் ஜெயத்திற்காக ஒருபோதும் பெருமை அடைந்திடவும் மாட்டோம்." ஏனென்றால், ஒரு காலத்தில் நாமேயடைந்த வீழ்ச்சிகளை நாம் அறிந்திருப்பதே அதற்குக் காரணமாகும்.

இதை மனதில்கொண்டுதான், பேதுரு மற்ற கிறிஸ்தவர்களை எச்சரித்தபோது, "முன்செய்த பாவங்களற நாம் சுத்திகரிக்கப்பட்டதை

*மறவாதிருக்கக்கடவோம்" (2 பேதுரு 1:9) எனக் கூறினார். இதற்கு மாறாகத்* **தன் முந்திய நிலையை மறக்கிறவன்** *எவனோ அவன் 1) கண் சொருகிப் போனவன்!* (SHORT-SIGHTED *கிட்டப்பார்வை கொண்டவன்). 2) குருடன்! என கடிந்து எச்சரித்தார். இவ்வாறு நான் ஒருபோதும் கண் சொருகிப் போன "கிட்டப்பார்வை" கொண்டவனாயும், குருடனாயும் இருக்க ஒருதுளியும் விரும்பவேயில்லை. நான் எக்காலத்தும், பரலோக பொக்கிஷங்களையும், நித்திய மதிப்புகளையும் காணக் கூடிய "***ஓர் நீண்ட தூரப்பார்வை***" கொண்டவனாகவே இருக்க விரும்புகிறேன்.*

*கண் சொருகிப்போன கிட்டப்பார்வை கொண்டவர்கள் யார்? யாரெல்லாம் பூமிக்குரியவைகளையும், பாவத்தின் இன்பங்களையும், பொருளாதார ஆஸ்திகளையும், மனுஷர் கனத்தையும், மனுஷர் அங்கீகாரத்தையும் உயர்ந்த மதிப்புடையதாய் மதித்திருக்கிறார்களோ அவர்களே கண் சொருகிக்போன கிட்டப்பார்வை கொண்டவர்கள். இது போன்ற விசுவாசிகளுக்காய் நாம் பரிதபித்து வருந்துவோமாக! பார்வையில் பலஹீனமடைந்து, சுமார் 10-அடிக்குமேல் எதையும் பார்க்க முடியாத ஒரு மனிதனை நீங்கள் கண்டால் அவன் மீது உங்களுக்குக் கோபம் வருவதில்லை! மாறாக, அவனுக்காகப் பரிதாபமே கொள்வீர்கள்.*

*இவ்வாறு பணத்திற்காகவும், பாவ இன்பங்களுக்காகவும், மனுஷர் அங்கீகாரத்திற்காகவும் ஏங்கி வாழும் விசுவாசியை நாம் கண்டால், அவர்களைக் கடிந்து கொள்வதில் எந்தப் பிரயோஜனமுமில்லை. அதற்குப் பதிலாக, அவர்களுக்காகப் பரிதாபம் கொள்ளவே வேண்டும். ஏனென்றால் அவர்களுடைய பார்வை வெகுவாய் பாதிக்கப்பட்டு "கிட்டப்பார்வை யுடையதாய்" மாறிவிட்டது! ஆம், ஆண்டவருக்கு முன்பாக ஒரு நாளில் இவர்கள் நிற்கும்போது சொல்லிமுடியா துயரம் இவர்களை ஆட்கொள்ளும் என்பது உறுதி!*

*இருப்பினும், இன்று ஏராளமான விசுவாசிகள் இந்தக் கொடிய நிலையில்தான் இன்னும் இருக்கிறார்கள். இவர்கள் ஏன் குருடர்களாய் மாறினார்கள் என்பதை விளங்கிக் கொண்டீர்களா? ஆம், "இவர்கள் தாங்கள் முன்செய்த பாவங்களறத் தாங்கள் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து போய்விட்டார்கள்" (2 பேதுரு 1:9).*

*எந்தக் குழியிலிருந்து தேவன் அவர்களைத் தூக்கி விட்டாரோ "அந்தக் குழியை" இவர்கள் மறந்து விட்டார்கள்! அதன் விளைவாய், ஏதாகிலும் சில பகுதிகளில் தேவன் அவர்களை ஆசீர்வதித்தவுடன், இமைப்பொழுதில் பெருமையும் அடைந்துவிடுகிறார்கள்!!*

*நானோ, தேவன் என்னைத் தூக்கி எடுத்த பாதாளக்குழியை ஒருபோதும் மறக்க விரும்பவில்லை. என்னுடைய எல்லா பாவங்களும் கழுவப்பட்டு, அவைகளில் ஒரு பாவத்தைக்கூட* **தேவன் நினைவு கூருவதில்லை** *என்பதை நான் அறிந்திருக்கிறேன். நான் "கிறிஸ்துவின்*

இரத்தத்தால் நீதிமானாக்கப்பட்டதினிமித்தம்" (ரோமர் 5:9) கடந்த 60 - ஆண்டுகால ஜீவியத்தில், நான் ஒருபோதும் பாவம் செய்யாதவனைப் போலவே தேவனுக்கு முன்பாகத் தைரியம் பெற்று நிற்கிறேன். ஆம், தேவனும் என்னை அப்படியேதான் காண்கிறார். இருப்பினும், நான் ஒருகாலத்தில் எப்படியிருந்தேனென்பதையோ ஒருக்காலும் நான் மறந்து விடவே மாட்டேன்! **ஆண்டவர்** என்னைப் பார்த்து, "நான் உன் பாவங்களை இனி நினையாமலிருப்பேன்" (எபி.8:12) என்றே கூறுகிறார். ஆனால், நான் முற்காலத்தில் எந்த இழிநிலையில் இருந்தேன் என்பதையோ **நான் நினைவுகூருவேன்!**

என் கடந்த காலத்தை "ஏதோ ஒரு வகையில்" தவறாய் நினைவுகூர்ந்து அதனிமித்தம் சாத்தான் என்னைக் குற்றப்படுத்தி அல்லது அந்தப் "பழைய பாவ சிந்தனையினிமித்தம்" என்னை மனச்சோர்வடையச் செய்ய ஒருபோதும் நான் சாத்தானை அனுமதிக்கவே மாட்டேன்! நான் நிச்சயமாய் அப்படிச் செய்வதில்லை!! ஏனென்றால், "கிறிஸ்து இயேசுவுக் குட்பட்டவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை" (ரோமர்.8:1) என வேத வசனம் மிக ஆணித்தரமாய் பறைசாற்றுகிறது. இதுபோன்ற சமயங்களில், சாத்தான் என்னைக் குற்றம்சாட்ட முயலும் போது, அவனுடைய முகத்தை நான் நேருக்கு நேராய் பார்த்து "சாத்தானே, இயேசுவின் இரத்தம் என் சகல பாவங்களையும் சுத்திகரித்து விட்டது" என்றே கூவி அறிவிக்கிறேன். ஆம், நான் இவ்வாறாகவே அந்த சாத்தானை "ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்" ஜெயிக்கிறேன் (வெளி.12:11). இவ்வாறு ஜெயத்தின் களிப்பை என் உள்ளத்தில் வைத்திருந்தாலும், என்னைப் பரிசுத்த ஆவியினால் தேவன் நிறைப்பதற்குக் காரணமாயிருந்த அந்தப் படுதோல்வியின் குழியையோ நான் ஒருக்காலும் மறந்திடவே மாட்டேன்!

ஒருசமயம் தேவன், யூதாவைப் பார்த்து "உனக்காகப் பரிதபித்து, ஒருவரும் உன்பேரில் இரக்கமாய் இருந்ததுமில்லை. கர்த்தராகிய நான் உன் அருகே கடந்து போகும்போது, மிதிக்கப்படுவதற்கு ஏதுவாய் நீ உன் இரத்தத்தில் கிடக்கிறதைக் கண்டு, **உன்னைத் தூக்கி எடுத்து,** ஜலத்தினால் முழுக்காட்டி, சித்திரத் தையலாடையை உனக்கு உடுத்தி என் மகிமை யினாலே உன் கீர்த்தி குறைவற்றதாய் இருக்கச் செய்தேன்" (எசேக்கியேல் 16:5,6,9,10,14) எனக் கூறினார். ஆம், நானும்கூட இந்த வசனத்திற்கு ஒப்பான நிலையிலிருந்தே மீட்டெடுக்கப்பட்டவன்!

இப்போது, அருமையான சகோதரனே! சகோதரியே! உங்களைக் குறித்த காரியம் எப்படியிருக்கிறது? உங்களில் அநேகர் பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனால், தேவன் உங்களை நொறுக்கி உங்கள் சுய நம்பிக்கையையும், பெருமை யையும் சிதறுண்டு போகச் செய்வதில் காரியம் சித்தி பெற்றாரா? என்ப தையோ உங்களைக் குறித்து என்னால் ஊர்ஜிதமாய் கூறமுடிய வில்லையே! அவ்வாறு, தேவனின் இந்த மகத்துவ செயல் உங்களில்

நடந்திருக்குமென்றால், அதைக் கண்டுபிடிப்பது மிகவும் எளிது! ஆம், கீழ்காணும் **இரண்டு கேள்விகளை** உங்களுக்கு நீங்களே கேட்டுப் பாருங்கள்:

**முதல் கேள்வி :** நீங்கள் பிறரை, குறிப்பாய் வேறு ஸ்தாபனத்தில் உள்ளவர்களை அற்பமாய் நோக்குகிறீர்களா? இந்தக் கேள்விக்கு உங்கள் பதில் என்ன? உபதேச விஷயங்களைப் பொறுத்தவரையில் நாம் அநேக கிறிஸ்தவர்களிடம் ஒத்துப்போக முடியாமல் இருக்கலாம். இருப்பினும், நாமோ அவர்களில் ஒருவரையும் அற்பமாய் எண்ணவே கூடாது! இவ்விஷயத்தில், என்னுடைய நேர்மையான சாட்சி யாதெனில், "என்னைக் காட்டிலும், மற்ற ஸ்தாபனங்களில் உள்ள அநேகக் கிறிஸ்தவர்கள் சிறந்தவர்களாய் இருக்கிறார்கள்!" என்பதேயாகும். இவர்களில் அநேகரோடு உபதேச வித்தியாசங்களினிமித்தம் நாம் சேர்ந்து ஊழியம் செய்ய முடிவதில்லை...... இருப்பினும், அவர்களில் ஒருவரையும் நான் அற்பமாய் எண்ணியதேயில்லை! அன்று தேவாலயத்தில் ஜெபித்த பரிசேயனைப்போல் "தேவனே, நான் மற்ற மனுஷர்களைப் போல் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்" (லூக்கா.18:11) என நீங்கள் என்றாவது எண்ணியதோ அல்லது ஜெபித்ததோ உண்டா? அவ்வாறு நீங்கள் எண்ணியிருந்தால் அல்லது கூறியிருந்தால், நீங்கள் என்னதான் பரிசுத்தாவியின் உயர்ந்த அனுபவங்களைப் பெற்றிருந்தாலும், நீங்கள் ஓர் நொறுங்குண்ட மனிதன் அல்லவே அல்ல!

**இரண்டாவது கேள்வி :** உங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியினிமித் தமோ அல்லது நீங்கள் சாதித்த சில செயல்களினிமித்தமோ பெருமை கொண்டிருக்கிறீர்களா? இந்தக் கேள்விக்கு உங்கள் பதில் என்ன? **ஓர் நொறுங்குண்ட மனிதன்,** தன் மாம்சத்தில் ஒரு நன்மையும் வாசமாயில்லை என்பதை உணர்ந்திருக்கிறபடியால், அவன் தன் ஜீவியத்திலோ அல்லது தன் ஊழியத்திலோ ஏதேனும் பலனைக் கண்டால், அதனிமித்தம் உடனே தேவனுக்கே மகிமையைச் செலுத்திட துரிதம் கொண்டிருப்பான்!

ஆகவே, ஓர் நொறுங்குண்ட மனிதனைச் சுட்டிக்காட்ட இந்த இரண்டு அடையாளங்களே போதுமானதாகும்:

1. விசுவாசியோ அல்லது அவிசுவாசியோ, ஆகிய ஒருவரையும் அவன் அற்பமாய் எண்ணிடவே மாட்டான்!

2. தன் ஆவிக்குரிய வளர்ச்சியிலோ அல்லது தன் ஊழியத்தின் வளர்ச்சியிலோ அவன் ஒருபோதும் மேன்மை பாராட்டவும் மாட்டான்!!

ஒரு மனிதனை நொறுக்குவதில் தேவன் வெற்றி கண்டதற்கு ஓர் சிறந்த உதாரணம் யாக்கோபேயாகும்! அதற்கு அவன் தேவனை இரு முறை சந்திக்க வேண்டியிருந்தது.**1) பெத்தேல்** என்ற இடத்தில்! (ஆதி.28), **2) பெனியேல்** என்ற இடத்தில்! (ஆதி.32).

பெத்தேல் என்பதற்கு அர்த்தம் "**தேவனுடைய வீடு**" (இது சபைக்கு அடையாளமாய் இருக்கிறது) என்பதாகும். பெனியேல் என்பதற்கு அர்த்தம் "**தேவனுடைய முகம்**" என்பதாகும். அதாவது, நாம் அனைவருமே தேவனுடைய வீடாகிய சபைக்குச் செல்வதைக் காட்டிலும், மேலாக....... தேவனுடைய முகத்தையே தரிசிக்கும் இலக்கை நோக்கி கடந்து செல்ல வேண்டும் என்ற அவசியத்தைத்தான் இந்த சத்தியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

பெத்தேலில் "சூரியன் அஸ்தமித்தது" (ஆதி. 28:11) எனக் கூறப் பட்டிருப்பதைப் பாருங்கள். இது ஓர் பூகோளரீதியான நிகழ்ச்சியாய் இருந்தாலும், யாக்கோபின் ஜீவியத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த சம்பவங்களையே இது சுட்டிக்காட்டுவதாகவே இருக்கிறது. ஏனென்றால், இதற்கடுத்து வந்த 20-ஆண்டுகள் யாக்கோபிற்கு ஓர் காரிருள் சூழ்ந்த இருண்ட காலமாகவே இருந்தது. இதற்குப் பின்பு யாக்கோபு பெனியேலுக்கு வந்தவுடன், "சூரியன் உதயமாயிற்று!" (ஆதி.32:31) எனக்கூறப்பட்டிருப்தையும் பாருங்கள்! இதுவும் பூகோளரீதியான ஓர் நிகழ்ச்சியாய் இருந்தாலும்..... யாக்கோபோ, முடிவில் தேவனுடைய வெளிச்சத்தைக் கண்டடைந்தான் அல்லது **தேவனுடைய முகத்தைத் தரிசித்துவிட்டான்!** என்பதே இங்கு நாம் காணும் சத்தியமாகும்!!

பேதுருவினிடத்தில் ஏற்பட்ட இரண்டு மன மாற்றங்களைப் போலவே, காலச் சக்கரத்தின் பின்னணியில், தேவனோடு இசைந்து நடந்த அநேக உத்தம விசுவாசிகளும் இதேபோன்று தேவனிடத்தில் **இரண்டு சந்திப்பின் அனுபவங்களைப்** பெற்றிருக்கிறார்கள். முதல் சந்திப்பு, இவர்கள் மறுபடியும் பிறந்து தேவனுடைய வீட்டில் (சபைக்குள்) பிரவேசித்த அனுபவமாகும்! இரண்டாவது சந்திப்பு, இவர்கள் தேவனை முகமுகமாய் கண்டு, பரிசுத்தாவியினால் நிறைந்து, தங்கள் ஜீவியத்தில் மறுரூபம் கண்டடைந்த அனுபவமாகும்!!

பெத்தேலில், யாக்கோபு கனவில் கண்ட ஏணி பூமியில் நிறுத்தப் பட்டு அதனுடைய மேல்பகுதியோ வானத்தை அடைந்ததாய் இருந்தது! இந்த ஏணி "பூமியிலிருந்து பரலோகத்திற்குச் செல்லும் ஒரே வழியான" தன்னையே குறிப்பிடுவதாக இயேசு கூறினார் (யோவான். 1:51). ஆகவே யாக்கோபு கண்ட அந்த தரிசனமானது, "பரலோகத்துக்கு வழி உண்டாகச் செய்த இயேசுவைப் பற்றிய" ஓர் தீர்க்கதரிசனமான தரிசனமேயாகும்!! அந்தக் கனவில், கர்த்தர் யாக்கோபிற்கு அநேக உன்னத காரியங்களை வாக்குத்தத்தமாய் அருளி இருந்தார். ஆனால் யாக்கோபோ **பூமிக்குரிய சிந்தை** கொண்டவனாய் இருந்து, அவன் ஓயாது இப்பூமிக்குரிய பாதுகாப்பு, சரீர சுகம் மற்றும் பொருளாதார ஐசுவரியம் ஆகியவைகளையே சிந்தித்துக் கொண்டிருந்த படியால், அவன் தேவனிடம், "கர்த்தாவே! இந்தப் பிரயாணத்தில் என்னை நீர் பாதுகாத்து, நல்ல உணவும் உடையும் தந்து, மீண்டும் பத்திரமாய் நான்

*வீடு வந்து சேர எனக்கு ஒத்தாசை செய்தால்..... என் சம்பாத்தியத்தில் உமக்கு என்னுடைய தசமபாகத்தைத் (10%) தருவேன்!!" என்றான். ஆம், தன்னைப் பராமரிக்கவேண்டிய ஓர் பொறுப்புள்ள காவல்காரனாகவே தேவனை யாக்கோபு நடத்தினான். அவ்வாறு தேவன் சரியாய் காவல் காத்துவிட்டால், அவருக்கு யாக்கோபு தன் வருமானத்தில் 10% சம்பளமும் தருவதாகப் பேரம் பேசிக் கொண்டான்!!*

*இன்றும் அநேக விசுவாசிகள் இவ்வாறாகவே தேவனை நடத்துவதை நாம் காண்கிறோம். அவரிடமிருந்து அவர்களுக்குத் தேவையாய் இருப்பதெல்லாம் "லௌகீக சொகுசுகளேயாகும்". அதைக் கர்த்தர் அவர்களுக்குத் தந்துவிட்டால்..... சபைக் கூட்டங்களுக்கு கிரமமாய் சென்று, அவருடைய ஊழியத்திற்கு கொஞ்சம் பணமும்கூட கொடுத்து விடுவார்கள்! இன்றைய இவ்வுலக வியாபாரிகளைப் போலவே இந்த விசுவாசிகள் தேவனிடம் வியாபாரம் செய்கிறார்கள். இந்த வியாபாரத்தில் அவர்களுக்கு வரவேண்டிய இலாபம் "லௌகீக சொகுசு!" அவ்வளவுதான்.*

*இவ்வாறு யாக்கோபு தன் ஜீவியத்தின் 20-ஆண்டுகளை, இப்பூமிக் குரியவைகளை வாரிப் பற்றிக்கொள்வதற்கே செலவழித்தான். அவன், லாபான் குடும்பத்திலிருந்து ஒரு மனைவியைத் தனக்கு தட்டிப் பறித்துக் கொள்ள எண்ணினான். அவனோ இரண்டு மனைவியைப் பெற்றான்! இரண்டு மனைவியை அவன் விரும்பாவிட்டாலும், அவனுடைய தட்டிப் பறிக்கும் குணத்தினால் "இரண்டு" அவன் கைகளில் சிக்கிக் கொண்டது!! பின்பு, அவன் லாபானிடம் தந்திரமாக அவனுடைய ஆடுகளையெல்லாம் தனக்கென அபகரித்து ஓர் பெரிய பணக்காரனாயும் மாறிவிட்டான். அவன் லாபான் வீட்டிற்கு முதலாவது சென்ற போது "காசில்லாதவனாய்" சென்று, அதே ஊரில் ஓர் பெரிய ஐசுவரியவானாகவும் மாறிவிட்டான்! இன்று ஏராளமான விசுவாசிகள் செய்வதுபோலவே, இந்த யாக்கோபும் தன்னுடைய ஐசுவரியம் செழித்த தன் சொத்துக்களை "தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு" இணையாகக் கருதினான்!!*

*ஆனால் மெய்யான* "**தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு**" **எது உண்மையான அடையாளம்?** *ஐசுவரியமா? .... சொத்துக்களா? இல்லை, இல்லவே இல்லை!! நாம் கிறிஸ்துவின் உன்னத சாயலுக்கு ஒப்பாய் மாறுவதே தேவ ஆசீர்வாதத்தின் மெய்யான அடையாளமாகும்.*

*நல்ல வேலை, நல்ல வீடு, அதைச் சூழ எண்ணற்ற சொகுசான வசதிகள். . . . இவை யாவும் இருந்தும், உங்கள் ஜீவியம் தேவனுக்கும் மனுஷர்களுக்கும் பிரயோஜனமற்றதாய் இருந்தால், அதனால் என்ன பிரயோஜனம்?*

*இருப்பினும், தேவனோ யாக்கோபோடு இடைபடும் தன் செயலை நிறுத்திவிடவே இல்லை. ஆம், அவனை அவர் இரண்டாவது தடவையாக*

*பெனியேலில் சந்தித்தார்! பிரியமான சகோதர, சகோதரிகளே, நீங்கள் யாவரும் யாக்கோபைப் போலவே இரண்டாவது தடவையாக தேவனைச் சந்திக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது!! இந்த சந்திப்பு உங்களில் நிகழவேண்டியது ஓர் அவசரத் தேவையென்று கூட சொல்வேன்.*

**அதாவது, உங்கள் ஜீவியத்தில் நீங்கள் பாறையின் பாதாளத்தில் வீழ்ச்சியடையும்போது நிகழவேண்டிய சந்திப்பு!**

*அங்கு தேவன் உங்களைச் சந்திக்கும்போது, உங்களை நியாயந்தீர்த்து நரகத்திற்கு அனுப்புவதற்குப் பதிலாய், பரவசம் நிறைந்த தன் பரிசுத்த ஆவியினால் நிறைத்துவிடும் அற்புதத்தைக் காண்பீர்கள்!!*

*சுமார் 20-ஆண்டுகளுக்கு முன்பு, சேஷ்ட புத்திரபாகத்தினிமித்தம் தன் சகோதரன் ஏசாவை, யாக்கோபு தந்திரமாய் ஏமாற்றியிருந்தான். ஆதியாகமம் 32-ம் அதிகாரத்தில், ஏசா தன்னைச் சந்திக்க வருகிறான் எனக் கேள்விப்பட்டவுடன், யாக்கோபு மிகவும் பயந்தான். "இம்முறை ஏசா தன்னை எப்படியும் கொன்றுவிடுவான்" என்றே யாக்கோபு எண்ணினான். இவ்வாறு, நாம் அஞ்சும்படியான சில சூழ்நிலைகளைச் சந்திக்க தேவன் நம்மை அனுமதிப்பது மிகவும் நல்லதென்றே நான் கருதுகிறேன்! ஏனென்றால், மனுஷர்கள் நமக்கு என்ன செய்வார்களோ என்ற அச்சம் நமக்கு வரும்வேளையில்தான், நாம் தேவனிடத்தில் கிட்டிச் சேரும் உந்துதல் தானாகவே ஏற்படுவதைக் காண்கிறோம்!!*

*மேலும், பெனியேலில் சம்பவித்த நிகழ்ச்சியில்* "**யாக்கோபு தனித்திருந்தான்**" *என வாசிக்கிறோம் (ஆதி.32:24). ஆம், தேவன் நம்மை சந்திப்பதற்கு முன்பாக நம்மைத் "தனியே" கொண்டுவர வேண்டியது மிகவும் அவசியமாய் இருக்கிறது! சாத்தான் இந்த இரகசியத்தை அறிந்ததினிமித்தமே இந்த உலக வாழ்க்கையை, குறிப்பாக 'நகரத்தில் வாழும் வாழ்க்கையை' மிகவும் அவசரமும் துரிதமும் நிறைந்ததாய் மாற்றிவிட்டான்! இதினிமித்தமாய் அநேக நல்ல விசுவாசிகள்கூட தேவனிடத்தில் தனித்திருப்பதற்கு நேரமே இல்லாத கதிக்கு ஆளாகி விட்டார்கள். இவ்வாறு அவர்களின் வாழ்க்கை துரித ஓட்டத்தில் சிக்கிவிட்டபடியால், அவர்களுடைய கால அட்டவணை நிகழ்ச்சிகள்* "**தேவன் என்ற முதல் முக்கியத்துவத்தை**" *ஆழ அமிழ்த்துவதாய் மாறி விட்டது! இதுவே இன்றைய கிறிஸ்தவத்தில் காணப்படும் கொடிய துயரமாய் இருக்கிறது!!*

*அந்த இராவிலே, தேவன் யாக்கோபோடு பல மணி நேரங்கள் போராடியும் யாக்கோபோ சிறிதும் இணங்காதவனாகவே இருந்தான். தேவன் போராடிய இந்தப் போராட்டம் சில மணிநேரங்கள் அல்ல..... யாக்கோபுடைய வாழ்க்கையின் கடந்த 20-ஆண்டுகால அவருடைய போராட்டத்திற்கு அடையாளமாகவே இந்தப் போராட்டம் இருந்தது! இவ்வாறு யாக்கோபு முரண்டுசெய்து சிறிதேனும் இணங்காதிருப்பதைக்*

*கண்ட தேவன், கடைசியாக அவனுடைய தொடைச்சந்து நிரந்தரமாய் சுளுக்கும்படிச் செய்துவிட்டார்! இவ்விதமாய் சுளுக்கிய நிகழ்ச்சி, யாக்கோபு பலசாலியாய் 40 - வயதாய் இருந்தபோது அவனுக்கு நேரிட்டது. யாக்கோபுடைய தாத்தா ஆபிரகாம் 125 - வருடங்கள் வரை வாழ்ந்தவர்! அக்காலத்து வயதின் விகிதாச்சாரப்படிப் பார்த்தால், அவன் ஒரு வாலிபனாய், சுமார் தன் ஜீவியத்தில் 75% இன்னும் வாழ வேண்டிய வனாகவே இருந்தான். ஆகவே இத்தனை வாலிப வயதில், தன் தொடைச் சந்து நிரந்தரமாய் சுளுக்கிய சம்பவம், யாக்கோபுடைய எதிர்காலத் திட்டங்கள் அனைத்தையும் சுக்குநூறாய் சிதறச் செய்ததாகவேயிருந்தது. இன்றைய நாட்களுக்குரிய விளக்கத்தின்படி கூறவேண்டுமென்றால், ஓர் 20-வயது வாலிபன் தன் இடுப்பு எலும்பு அவன் எலும்புக்குழியிலிருந்து நிரந்தரமாய் விலகியதினிமித்தம், எஞ்சியுள்ள தன் ஜீவகாலமெல்லாம் "ஊன்றுகோல்" உபயோகிக்க வேண்டிய துயர நிலைக்கே ஒப்பிட்டுக் கூறலாம்!! இந்த நிலை, மனதில் பெரும் துயரத்தைக் கொண்டுவரும் நிலை அல்லவா!! ஆம், யாக்கோபு இனி தன் எஞ்சிய வாழ்நாட் களெல்லாம் கைத்தாங்கும் ஊன்றுகோல் இல்லாமல் நடக்கவே முடியாத நிலைக்கு வந்துவிட்டான்!!*

*யாக்கோபை நொறுங்கச் செய்வதற்கு எத்தனையோ வழிகளை தேவன் கையாண்டும் அது அவருக்கு கை கூடவேயில்லை. எனவேதான், அவர்* **கடைசி முயற்சியாக** *இந்த நிரந்தரமான சரீர ஊனத்தை அவனுக்கு அனுமதித்தார்!* **ஆ! இந்த ஊனம் இப்போது யாக்கோபை நொறுங்கச் செய்து விட்டது!! அல்லேலூயா.**

*"உடலை ஊனப்படுத்துவதுதான்" நாம் நொறுங்குவதற்குத் தேவன் கண்ட வழியென்றால், யாக்கோபுக்குச் செய்தது போலவே அவர் நமக்கும் செய்வார்! நித்தியத்திற்குரிய சில கொடிய பேரழிவிலிருந்து நம்மை இரட்சிக்கும் ஒரே நோக்கத்தோடு, தான் அதிகம் நேசிப்பவர் களிடத்தில் மாத்திரமே தேவன் இவ்வித சிட்சையை கையாளுகிறார்!!*

*காரியம் இவ்வாறாய் இருக்க, தேவன் உங்களை சிட்சித்துத் திருத்துவதை நிறுத்திவிட்டால், நீங்கள் தொடர்ந்து பின்மாற்றக் காரராகவே ஜீவித்து "நல்ல சுகத்தோடும்" "நிறைய சம்பாத்தியத்தோடும்" ஆனால், உங்கள் ஜீவியத்தையே வீணாக்கிப்போட அவர் அனுமதித்து விடுவார்! இதுபோன்ற நிலையை யார் விரும்புவார்கள்?*

> **நானோ, தேவன் என்னிடத்தில் கடுமையாய் இடைபட்டு, சிட்சித்து, தேவையானால் சரீர சுகவீனத்தின் மூலமாய் கூட என்னை நொறுக்கி . . . அதன் மூலமாய் நான் தேவனோடு இசைந்து நடந்து, அவருடைய நோக்கங்களை இப்பூமியில் நிறைவேற்றி முடிக்கவே நான் இன்றும் வாஞ்சையுள்ளவனாய் இருக்கிறேன்.**

*வல்லமை நிறைந்த அப்போஸ்தலனாகிய பவுலைக்கூட நொறுங் குண்ட நிலையில் பாதுகாப்பதற்கு "அவருடைய மாம்சத்தில் ஒரு முள்" அவசியமாய் இருந்தது (2 கொரி.12:7). பவுலின் மாம்சத்தில் தரப்பட்ட முள், அவருடைய ஜீவகாலமெல்லாம் துன்பம் தந்த ஓர் சரீர ஊனமாய்கூட*

இருந்திருக்கலாம். "இந்த சாத்தானின் தூதன்" தன்னை விட்டு எடுபடும்படி பவுல் திரும்பத் திரும்ப தேவனிடம் ஜெபித்தார். ஆனால் தேவனோ, "இந்த முள் சாத்தானுடைய தூதனாகவேயிருந் தாலும், அதை உன்னிடமிருந்து நான் எடுக்கமாட்டேன். உன்னைத் தொடர்ந்து தாழ்மையாய் இருக்கச் செய்து, அதன் மூலம் நீ எனக்கும்; உன் சக-மனிதர்களுக்கும் பயனுள்ளவனாய் இருப்பதற்கு, இந்த முள் உன்னிடம் நிரந்தரமாய் இருக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது" எனப் பதில் உரைத்துவிட்டார்.

யாக்கோபின் தொடைச்சந்தை தேவன் சுளுக்கியபின்பு, அவனைப் பார்த்து "யாக்கோபே, என் வேலை முடிந்துவிட்டது, இப்போது நான் போகட்டும் . . . உனக்குத்தான் நான் தேவையில்லையே . . . உனக்குத் தேவையான விருப்பமெல்லாம் ஸ்திரீகளும், பணமும்தானே!" எனக் கூறி போகப் பார்த்தார். ஆனால் யாக்கோபோ தேவனை இப்போது போகவிடவில்லை. ஆம், யாக்கோபு இறுதியாக முற்றிலுமாய் மாறிவிட்டான்! தன் ஜீவகாலமெல்லாம் ஸ்திரீகளையும், சொத்துக் களையும் பற்றிக்கொள்ளத் தன் காலத்தைச் செலவழித்த இந்த யாக்கோபு, இப்போது தேவனை இறுகப் பற்றிக்கொண்டு "**நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய,** நான் உம்மைப் போகவிடமாட்டேன்" எனக் கதறினான். இவ்வாறு தொடைச்சந்து சுளுக்கிய சம்பவத்திற்குப் பிறகு யாக்கோபின் இருதயத்தில் நடைபெற்ற மாபெரும் கிரியைகளைக் கண்டீர்களா? ஆம், அவன் இப்போது தேவன் ஒருவர் மீதே வாஞ்சை கொண்டிருக்கிறான்!!

ஓர் முதுமொழிக் கூற்றில், "**தேவன் ஒருவர் தவிர** உங்களுக்கு வேறு எதுவும் இல்லாதிருந்தால், எல்லாவற்றைக் காட்டிலும் அவர் ஒருவரே உங்களுக்குப் போதுமானதாய் இருப்பதை நீங்கள் காண்பீர்கள்!" ஆ, இந்த வாக்கியம் எத்தனை உண்மையானது!!

இந்த சரியான நேரத்தில், தேவன் யாக்கோபிடம் "உன் பெயர் என்ன?" என்று கேட்டார். அதற்கு அவன் என் பெயர் "யாக்கோபு" என்றான். யாக்கோபு என்ற பெயருக்கு "தந்திரமாய் வஞ்சிப்பவன்" என்றே அர்த்தம்! அதாவது, யாக்கோபு கடைசியாக "தான் ஒரு தந்திர வஞ்சகன்" என்ற உண்மையை **நேர்மையுடன் ஒத்துக்கொண்டான்.**

நீங்களும் யாக்கோபைப் போலவே ஓர் வஞ்சகனாய் இருக் கிறீர்களா? ஏதோ ஆவிக்குரிய மனுஷனைப்போல் உங்களைச் சுற்றியுள்ளவர்களை எண்ண வைத்து ஏமாற்றிக் கொண்டிருக் கிறீர்களா? அப்படியானால், இன்று நீங்கள் தேவனிடத்தில் நேர்மை உள்ளத்தோடு திரும்பி வந்து, "தேவனே! நானும் ஒரு மாய்மாலக் காரன்தான்!" என அவரைப் பார்த்துக் கூறமுடியுமா?

ஏனெனில், இதே யாக்கோபை, அநேக வருடங்களுக்கு முன்பு குருடாயிருந்த அவன் தகப்பனாகிய ஈசாக்கு, "உன் பெயர் என்ன?" என்று

*கேட்டபோது "நான் ஏசா" என்று யாக்கோபு தந்திரமாய் பாசாங்கு செய்தான். ஆனால் இப்போதோ யாக்கோபு நேர்மைக்கு வந்துவிட்டான்! அதனிமித்தம் மகிழ்ந்த ஆண்டவர், "இனியும் நீ ஓர் தந்திர வஞ்சகன்* **யாக்கோபு அல்ல**" *(வசனம் 28) என சிறிதும் தாமதியாமல் உடனே கூறிவிட்டார்!!*

*இவ்வாறு தேவன் கூறியது, சொல்லிமுடியா உற்சாகத்தை நமக்குத் தருகிறதல்லவா?*

*இந்த உற்சாக தொனி உங்கள் காதுகளில் தொனிக்கிறதா? "ஆம், இனியும் நீ ஓர் வஞ்சகன் அல்ல!" என தேவன் உங்களிடம் கூறுவது, எத்தனை ஆச்சரியம்! அற்புதம்! அல்லேலூயா!!*

*தேவன் யாக்கோபிடம் இவ்வாறு கூறியதால், நீங்கள் இனி ஒருபோதும் பாவத்தில் வீழ்ச்சியடைய மாட்டீர்கள் என அர்த்தம் இல்லை! அதற்கு மாறாக, இனி ஒருபோதும் உங்கள் ஜீவியத்தில் "வஞ்சகம்" இருக்காது என்பதேயாகும்!! எஞ்சியுள்ள உங்கள் ஜீவிய காலம் முழுவதும், இந்த தந்திர வஞ்சகம் இனி ஒருபோதும் உங்களிடம் இருக்காது என்பதே அந்த நற்செய்தியாகும்.*

*பின்பு தேவன் யாக்கோபைப் பார்த்து, "உன் பெயர் இனி இஸ்ரவேல் (தேவனுடைய இளவரசன்) எனப்படும்! தேவனோடும் மனிதனோடும் போராடி மேற்கொண்டாயே" எனக் கூறினார் (ஆதியாகமம். 32:28). இவ்வாறு ஒரு தந்திர வஞ்சகன், "தேவனுடைய இளவரசனாய்" மாறுவது உள்ளத்தைக் கவரும் மறுரூபம் அல்லவா! இத்தனை ஆச்சரியமான செயல் இந்த "யாக்கோபு நொறுங்குண்ட பிறகுதான்" நிகழ்ந்தது.*

*இப்போது நாமும் இஸ்ரவேலாய் மாறுவதே நம்முடைய அழைப்பாகும்! அதாவது, கிறிஸ்துவோடு அவரது சிங்காசனத்தில் "தேவ இளவரசனாய்" அமர்ந்து சத்துருவாகிய சாத்தான் மீது* **ஆவிக்குரிய அதிகாரத்தைப்** *பிரயோகித்து.... அவனுடைய பிடியிலுள்ள புருஷர் களையும், ஸ்திரீகளையும் விடுவிப்பதே அந்த அழைப்பின் நோக்க மாகும். கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கங்களாய் இருக்கும் நாம், இவ்வாறு தேவனிடத்திலும் மனிதனிடத்திலும் வல்லமை பெற்றவர்களாய் ஜீவிக்கும் ஜெயம் கொண்ட ஜீவியமே நாம் எப்போதும் செய்திட வேண்டும். அதன்மூலமாய், நாம் எல்லா மனுஷருக்கும் ஓர் ஆசீர்வாத மாய் இருந்திட வேண்டும் என்பதே அந்த அழைப்பின் முடிவான நோக்கமாகும். ஆனால் இந்த அற்புத செயல், நாம் நொறுங்குண்டால் மாத்திரமே நமக்கு சம்பவிக்கும்!*

**நம்முடைய மாய்மால ஜீவியத்தையும், தந்திர வஞ்சகத்தையும் ஒத்துக்கொண்டு, தேவனிடத்தில் நேர்மையாய் அறிக்கை செய்யும் தருணத்தில்தான், இந்த மெய்யான "நொறுங்குதல்" நமக்குள் சம்பவித்திட முடியும்!!**

*இவ்வாறு யாக்கோபுக்கு நடந்த நிகழ்ச்சிக்குப் பின், பல*

*நூற்றாண்டுகள் கழித்து, அவனுடையச் சந்ததியைச் சார்ந்த "நாத்தான்வேல்" இயேசுவை ஒருமுறை சந்தித்தான். அப்போது ஆண்டவர் அவனைப் பார்த்து என்ன கூறினார் தெரியுமா? : "இதோ, உத்தம இஸ்ரவேலன்! இவனிடத்தில்* **யாக்கோபு (கபடு) இல்லை**" *(யோவான். 1:47) என்றே கூறினார். மேலும், அச்சமயத்தில் இயேசு நாத்தான்வேலுக்கு, யாக்கோபு பெத்தேலில் கண்ட ஏணியை நினைவுபடுத்தி, "இப்போது* **நீயும் இஸ்ரவேலன்!**" *என அறிவித்தார். நாத்தான்வேல் பூரண புருஷன் என்பதற்காக இயேசு அவ்வாறு கூறாமல், அவனிடத்தில் யாதொரு தந்திர வஞ்சகமும் இல்லாததினிமித்தமே அவ்வாறு கூறினார்!!*

*மேலும், யாக்கோபு அந்த ஸ்தலத்தில் "தேவனை முகமுகமாய் கண்டபடியால்" அந்த ஸ்தலத்திற்கு* "**பெனியேல்**" *எனப் பெயர் சூட்டினான். அவனோ முதலாவது, பெத்தேலில், தேவனுடைய வீட்டைக் குறித்தப் பரவசத்தால் மாத்திரமே நிறைந்திருந்தான். நீங்களும் அவ்வாறே தேவனுடைய வீட்டில் பல ஆண்டுகளாய் பிரவேசித்து வாழ்ந்திருக்கலாம் . . . இருப்பினும், நீங்களோ இன்னமும் தேவனுடைய முகத்தைக் காணாதிருக்கிறீர்களோ? அப்படியானால், உங்களுக்கும்* **தேவனிடத்தில் இந்த இரண்டாவது சந்திப்பு** *அவசியமாய் இருக்கிறது! ஏனெனில் இந்த இரண்டாவது சந்திப்பில்தான், நீங்கள் அவருடைய முகத்தை தரிசித்திட முடியும்!!*

*இந்தச் சொல்லி முடியா பரவசத்தை அனுபவித்த யாக்கோபு, "நான் இப்போது தேவனை முகமுகமாய்க் கண்டேன், என் உயிர் என்னில் பிழைத்துக் கொண்டது" என்றான்!!*

*அதாவது, "என்னுடைய மோசமான செயலினிமித்தம் நான் கம்பெனியிலிருந்து தூக்கி எறியப்பட்டிருக்க வேண்டும்! அதற்கு மாறாக என்னுடைய சம்பளம் 3 - மடங்காய் உயர்ந்தது ஓர் மகா ஆச்சரியம்!!" என்பதே அந்தப் பரவசத்தின் பொருளாகும்.*

**அல்லது, "நான் நரகம் செல்வதற்கே பாத்திரன், ஆனால் ஆண்டவரோ என்னைப் பரிசுத்தாவியினால் நிறைத்து விட்டார் . . . அல்லேலூயா!" என்றும்கூட இந்தப் பரவச அனுபவத்தைக் கூறமுடியும்!!**

*இன்று அநேக விசுவாசிகள் பரிசுத்தாவியினால் நிரப்பப்படாததற்குரிய காரணத்தை இப்போது என்னால் ஓரளவு விளங்கிக்கொள்ள முடிகிறது. ஆம், இவர்கள்* **பரிசுத்தாவியின் அபிஷேகத்தை சம்பாதிக்க** *நினைப்பதே அதற்குக் காரணமாகும். எப்படியெனில், அவருக்குத் தகுதியுள்ளவர்களாய் இருப்பதற்கு இவர்களே முயற்சிக்கிறார்கள்! அநேக மார்க்கங்களிலுள்ள எண்ணற்ற உண்மையான ஜனங்கள்கூட, இதே வழியில்தான் தங்களுக்குப் பாவமன்னிப்பைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு தேடியும் அவர்களுக்கோ பாவ மன்னிப்பு கிடைக்காததற்கு என்ன காரணம்? ஏனென்றால், இவர்கள் தேவனுக்குரியவைகளைத் தாங்களாகவே முயற்சித்து சம்பாதிக்கப் பார்க்கிறார்கள் என்பதே காரணமாகும்.*

முதல் அனுபவமாய், உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எவ்வாறு பாவமன்னிப்பைப் பெற்றுக் கொண்டீர்கள்? நீங்களாக அதை சம்பாதித்த தினாலா? அல்லது அதற்கு நீங்கள் பாத்திரர் என்பதற்காகவா? இல்லை! அதற்கு மாறாக, உங்கள் வாழ்வில் ஒரு நாள் "தேவனுடைய மன்னிப்பிற்கு நான் ஒருபோதும் பாத்திரனல்ல" என்றே மனதார உணர்ந்தீர்கள். அவ்வாறு நீங்கள் இயேசுவிடத்தில் வந்தபோது, ஒரு கிறிஸ்தவனாக வராமல் **ஒரு "பாவியாகவே" வந்தீர்கள்!** இதனிமித்தமே, உங்கள் பாவங்கள் உங்களுக்கு உடனடியாக மன்னிக்கப்பட்டது! இப்போது நீங்கள் பரிசுத்தாவியின் நிறைவைப் பெறுவதற்கும் "**இதைப் போலவேதான்**" அவரிடம் நீங்கள் வரவேண்டும்!

இன்று அநேக விசுவாசிகள் பரிசுத்தாவியின் நிறைவைப் பெறுவதற்காக உபவாசித்து, ஜெபித்துக் காத்திருக்கிறார்கள். அவ்வாறு செய்வதில் ஒன்றும் தவறில்லைதான். இதெல்லாமே நல்லதுதான். ஆனால் நீங்கள் பரிசுத்தாவியின் வரத்தைப் பெறுவதற்கு இவைகள் யாதொன்றையும் "தகுதியாய்" வைத்தீர்களானால், நீங்கள் தவறான பாதையில் நிற்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்!

ஏனென்றால், நீங்கள் ஆவியின் நிறைவை இன்னமும் பெறாதிருக்க நேரிட்டால், நீங்கள் தேவனைப் பார்த்து, "ஆண்டவரே! நான் உபவாசித்தேன், நான் ஜெபித்தேன், நான் காத்திருந்தேன்! அப்படியிருந்தும் நீர் என்னை ஏன் பரிசுத்தாவியினால் நிரப்பவில்லை?" என்றுகூட நீங்கள் தவறாய் கேள்வி கேட்கத் துணிய முடியும்! ஆம், நீங்கள் எவ்வாறு உங்கள் பாவமன்னிப்பை ஒருபோதும் சம்பாதிக்க அல்லது அதைப் பெறும்படி உங்களைத் தகுதிப்படுத்திக்கொள்ள முடியாதோ.... அதைப்போலவே, நீங்கள் ஒருபோதும் பரிசுத்தாவியையும் சம்பாதிக்கவோ அல்லது அதற்கு உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளவோ ஒருக்காலும் முடியாது! **பாவமன்னிப்பு, பரிசுத்தாவி ஆகிய இரண்டுமே தேவனுடைய ஈவுகள்தான்.** இதில் யாதொன்றைப் பெறுவதற்கும் நீங்கள் தேவனுக்கு கூலியோ அல்லது பணமோ ஒருக்காலும் செலுத்திடவே முடியாது. ஒன்று, அந்த ஈவுகளை நீங்கள் இலவசமாய்தான் பெறவேண்டும்! அல்லது, அதை ஒருபோதும் பெற முடியாதவர்களாய் இருக்க வேண்டும்!! அவ்வளவுதான்.

தேவனுடைய ஈவுகள் அனைத்துமே முற்றிலும் இலவச மானதுதான். ஆனால் மனுஷனோ அவைகளுக்காய் ஒன்றை செலுத்த முயற்சிக்கிறபடியால், அவர்கள் அதை ஒருபோதும் பெறமுடியாத பரிதாப நிலைக்கு வந்துவிடுகிறார்கள். இன்று அநேகர் பரிசுத்தாவி யினால் நிரப்பப்படாதிருப்பதற்கு இதுவே பிரதான காரணமாய் இருக்கக் கூடுமென்றே நான் நம்புகிறேன்!

இயேசு இந்த பூமியில் இருந்தபோது, வேறு யாரைக் காட்டிலும் தாங்களே பாவமன்னிப்பைப் பெறுவதற்குத் தகுதி கொண்டவர்களென பரிசேயர்கள் எண்ணினார்கள். ஆனால் அவர்களோ அதைப் பெற

*முடியாமல்.... நரகத்திற்கே சென்றார்கள்! இதற்கு நேர்மாறாக,* **மகதலேனா மரியாள்** *போன்ற பகிரங்கமான பாவிகளோ பாவமன்னிப்பை உடனடியாகப் பெற்றுவிட்டார்கள்! தன் ஜீவிய காலமெல்லாம் குற்றம் செய்தே வாழ்ந்த ஒரு திருடன் கணப்பொழுதில் மன்னிப்பைப் பெற்று, அவன் சிலுவையில் அறையுண்டு மரித்த அதே ராத்திரியில் பரதீசுக்கு சென்றுவிட்டானே! ஆ, இது ஆச்சரியம்!!*

**எந்தத் தகுதியுமில்லாதவர்களுக்கே தேவன் தன்னுடைய மிகச் சிறந்த ஈவுகளைத் தருகிறார்!**

*திராட்சத்தோட்டத்திற்கு 11-ம் மணி வேளையில் வேலை செய்ய வந்தவர்கள்,* **தாங்கள் ஒன்றிற்கும் பாத்திரர் அல்ல** *என அறிந்திருந்த படியால்தான், கூலியை முதலாவதாகவும், நிறைவாகவும் பெற்றார்கள்! ஆனால், முந்தி வந்தவர்களோ, தாங்கள்* **அதிகக் கூலிக்குப் பாத்திரர்** *என எண்ணியபடியால், கடைசி வரிசைக்குச் செல்லும் கதிக்கு ஆளாகி விட்டார்கள்! ஆ, இது துயரம்!!*

*கெட்டகுமாரன் உவமையில், அவனுடைய தந்தை ஒரு மோதிரம் அணிந்திருந்தான் என வாசிக்கிறோம். ஒரு நாள், அந்த மோதிரத்தை அந்தத் தந்தை எடுத்து தன் பணத்தையெல்லாம் வீணாக்கிப் போட்ட இளைய குமாரனுக்கே அணிவித்து விட்டார்! அதை, அந்தத் தந்தை மூத்தக் குமாரனுக்கு ஏன் தரவில்லை? ஏனென்றால், அவன் "தான் பாத்திரன்" என எண்ணிய சுய-நீதியால் நிறைந்திருந்ததே காரணமாகும். மனுஷருடைய பார்வையில் மூத்த குமாரனே மோதிரத்தைப் பெறுவதற்கு பாத்திரனாய் காணப்பட்டான்! ஆனால் அவன் தந்தையோ அதை தன் இளைய குமாரனுக்கே கொடுத்து விட்டார்!!*

*ஆம், இதுவே தேவனுடைய வழியாய் இருக்கிறது! "ஒருவனும்" அவருடைய சமூகத்தில் மேன்மை பாராட்டாதபடிக்கு மனுஷனுடைய பெருமையைத் தாழ்த்தும்படிக்கே இவ்வாறு அவர் கிரியை செய்கிறார். பார்த்தீர்களா, அவருடைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல . . . அவருடைய சிந்தைகள் நம்முடைய சிந்தைகளும் அல்ல!*

*இங்கே நான் வலியுறுத்த முயற்சிக்கும் இந்தச் சத்தியத்தை மாத்திரம் நீங்கள் நன்றாய் விளங்கிக் கொண்டால், தேவன் மனிதனோடு எவ்வாறு இடைபடுகிறார் என்ற அடிப்படையான சூத்திரத்தையே நீங்கள் விளங்கிக் கொண்டீர்களென நான் நிச்சயமாய் கூறுவேன்!*

*இத்தனை ஆச்சரியமான தேவனுடைய மிகுதியான தயவு "என்னை" மனந்திரும்புதலுக்கே நடத்தியிருக்கிறது! மேலும், அடுத்தடுத்து என்னுடைய ஜீவியத்தில் அவர் காட்டிய ஒவ்வொரு தயவும் என்னை இன்னும் அதிகமான மனந்திரும்புதலுக்கே நடத்தி வருவதையும் நான் அனுபவித்து வருகிறேன்!!*

*இந்த அன்புள்ள தேவ தயவு உங்களையும் மனந்திரும்புதலுக்கே நடத்துவதாக! ஆகவே, அவருடைய தயவை உங்களுக்குச் சாதகமாய்*

*ஒருபோதும் தவறாய் கையாண்டு விடாதீர்கள். எப்படியெனில், எத்தனையோ வழிகளில் தேவன் நமக்கு மிகுந்த தயவுள்ளவராயும், அன்புள்ளவராயும் இருந்திருக்கிறபடியால், அவர் நம்மைக் குறித்து மகிழ்ச்சியாயிருக்கிறார் என நாம் ஒருபோதும் எண்ணிக் கொள்ளா திருக்கக்கடவோம்! ஏனெனில் அவர்* **எல்லா மனுஷரிடமுமே** *அன்பும், தயவுள்ளவராகவுமே இருக்கிறார். ஆகவே அவருடைய தயவு, நம்மை மனந்திரும்புதலுக்கு நடத்தும் நோக்கத்திற்கே அருளப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கக்கடவோம்.*

**இதை உணர்ந்து நாம் அவரிடம் மாய்மாலம் செய்யாமல், நேர்மையாய் அவரிடம் திரும்பி விட்டால்.... நம்முடைய கைகளிலும் தம்முடைய மோதிரத்தை அவர் போட்டு விடுவார்!**

*இவ்வித மாய்மாலம் செய்யாத நம்போன்ற பாவிகளுக்காகவே தன் மோதிரத்தை அவர் விசேஷமாய் வைத்திருக்கிறார்!! அல்லேலூயா.*

*இயேசு ஒரு சமயம் பரிசேயர்களிடத்தில் "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டிய தில்லை" என சிலேடை நயத்துடன் கூறினார் (மத்தேயு 9:12). அதாவது, "நீங்கள்தான் மிகுந்த ஆரோக்கியத்துடன் இருக்கிறீர்களே! உங்களுக்கு வைத்தியன் எதற்கு? நானோ வியாதியுள்ளவர்களுக்காக மட்டுமே வந்தேன்" என்றார். இவ்வாறு மிகுந்த அன்புடன், அவர் சிலேடை நயத்தைப் பயன்படுத்தி, அவர்களுக்கு விழிப்புண்டாக்க முயற்சித்தார் . . .ஆனால் அவர்களோ விழித்துக் கொள்ளவில்லை!*

*ஆம், தங்களை நீதிமான்களாக எண்ணிக்கொள்பவர்களை அழைப்பதற்காக இயேசு வராமல், தாங்கள் பாவிகள் என்பதை* **"உணர்ந்து ஒத்துக்கொள்பவர்களை"** *அழைக்கவே அவர் வந்தார். இந்தச் செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் நீங்களும்கூட, இந்தப் பரிசேயர்களைப் போலவே மாய்மாலமும், பெருமையும், சுயநீதியும் கொண்ட வியாதி நிறைந்தவர்களாய் இருந்து கொண்டு.... நீங்களோ இந்த நோய்களைச் சிறிதும்* **உணராதவர்களாய்** *இருக்க முடியும் என்றே உங்களை நான் அன்புடன் எச்சரிக்கிறேன்! இவ்வித நோய்கள் எய்ட்ஸையும், புற்று நோயையும்விட அதிகக் கொடியதாகும்! இந்த நோய்கள் உங்களை நிச்சயமாய் அழித்துவிடும்!! பரிசேயர்களிடத்தில் இருந்த இந்தப் பாவங்களை, மற்றப் பாவங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கொலை, விபசாரம் போன்ற பாவங்கள் வெறும் காய்ச்சலும், ஜலதோஷமும் மாத்திரமே எனக் கூறலாம். ஆனால் நீங்களோ, கொலைகாரர்களும்; விபசாரக்காரர்களுமே மோசமான நோய் கொண்டவர்கள் என இன்று வரை எண்ணியிருந்திருக்கலாம். ஆனால் உண்மை யாதெனில், இந்த இரு ரகத்தாரை விட* **நீங்கள் தான்** *அதிக நோய் கொண்டவர்களாய் இருக்கிறீர்கள் என்பதை இன்றாவது உணர்ந்து கொள்ளுங்கள்.*

*தேவனோ, தன்னுடைய ஜீவனையும்; தன்னுடைய வல்லமை*

*யையும்; தன்னுடைய அதிகாரத்தையும் நமக்குத் தர விரும்புகிறார். ஆகவேதான், நம்மைத் திரும்பத் திரும்ப வீழ்ச்சியடையச் செய்து, முடிவில் அந்தப் பாக்கியமான* "**நொறுங்கும் நிலைக்கு**" *நம்மை வரச் செய்கிறார்!*

*யோபுவின் சரித்திரத்தில், அவன் தன்னுடைய சொத்துக்களையும், தன்னுடைய பிள்ளைகளையும், தன்னுடைய சுகத்தையும் இழக்கும்படி தேவன் அனுமதித்து எவ்வாறு அவனைக் குன்றின் படுகுழிக்கு கொண்டுவந்தார் என்பதைக் காண்கிறோம். ஒருவகையில் பார்த்தால், மனைவியையும் (தொடர்ந்து தொந்தரவு செய்துகொண்டேயிருந்த மனைவி!) 3 - நல்ல நண்பர்களையும்கூட (தவறாய் புரிந்துகொண்டு யோபுவைக் குற்றம் சாட்டியவர்கள்) இழந்துவிட்டான்!! அவனுடைய நண்பர்கள் "சுயநீதி பிரசங்கிகளாய்" மாறி, "வீழ்ச்சியுற்றிருந்த யோபுவை உதைப்பதில்" பேரானந்தம் கொண்டார்கள்! யோபுவுக்கு தேவன் இரங்கி, இந்த நண்பர்களின் செயலுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நாள்வரை யோபுவைத் தொடர்ந்து இவர்கள் உதைத்துக் கொண்டே தான் இருந்தார்கள்!*

**இத்தனை நெருக்கங்களை தேவன் அனுமதித்திருந்தும், யோபுவோ திரும்பத் திரும்ப தன்னை நியாயப்படுத்திக் கொண்டேதானிருந்தான்!**

*இறுதியில், கர்த்தர் யோபுவோடு பேசின பிறகுதான் யோபு தன்னிடமிருந்த சுய-நீதியின் கறையைக் கண்ணுற்று மனந்திரும்பினான். மெய்யாகவே, யோபு ஒரு நீதிமான்! அது நல்லதுதான்!! ஆனால் அவனோ அந்த நீதியில் பெருமை கொண்டிருந்தான்!..... ஆ, அதுதான் கொடிய தீமை!! ஆனால் தேவன் அவனோடு இடைபட்டப் பிறகோ, இந்த யோபு "ஓர் நொறுங்குண்ட மனிதனாகிவிட்டான்!" அந்த நொறுங்குண்ட நிலைக்குப் பிறகு அவன் தேவன் ஒருவருக்கே மகிமை செலுத்தத் துவங்கினான்!! இவ்வாறாகவே யோபுவின் மீது தேவன் கொண்ட நோக்கம் நிறைவேறியது.*

*யோபு நொறுங்குண்ட இடத்திற்கு வந்தவுடன் அவன் தேவனிடம் கூறிய வார்த்தைகளைச் சற்று கவனித்துப் பாருங்கள் :*

**"என் காதினால் உம்மைக் குறித்து (என்னைச் சூழ நிற்கும் பிரசங்கிகள் மூலமாய்) கேள்விப்பட்டேன். இப்போதோ என் கண் உம்மைக் காண்கிறது" (யோபு 42:5) என்றான். ஆ, இந்த இடம்தான், "யோபுவின் பெனியேலாகும்!"**

*யாக்கோபைப் போலவே, இவனும் தேவனுடைய முகத்தைக் கண்டு அதனிமித்தம், அவனுடைய ஜீவன் அழிவையடையாமல் பாதுகாக்கப்பட்டது. யோபுவுக்கு நிகழ்ந்த இந்நிகழ்ச்சி கொண்டு வந்த முடிவு என்ன? ஆம், இந்த யோபு தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்பட்டு* **மனந்திரும்பினான்!** *(வசனம் 6). இந்த 4-பிரசங்கிகள் பல நாட்கள் தொடர்ந்து பிரசங்கித்து சாதிக்க முடியாததை தேவன் தம்முடைய தயவுள்ள அன்பை வெளிப்படுத்தி (தன் முகத்தைக்*

*காண்பித்து) ஓர் இமைப்பொழுதில் தன் நோக்கத்தை யோபுவில் செய்து முடித்து விட்டார்!! கடைசியாக, இந்த தேவ தயவே யோபுவை உடைத்து, அவனை மனந்திரும்பும்படி நடத்திவிட்டது!! நம்மில் அநேகர் "தேவனைப் பற்றி" கூட்டங்களில் பிரசங்கிகள் மூலமாய் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இப்போது நமக்குத் தேவையாய் இருப்பதெல்லாம்* **தேவனுடைய முகத்தை நேருக்கு நேராய் சந்தித்து,** *அவர் நம்மீது கொண்ட தயவைக்கண்டு, அந்த தயவுள்ள அன்பினால் நொறுங்கி விடுவதேயாகும்!*

*இதுதான் பேதுருவுக்கும் சம்பவித்தது. அவன் இயேசுவை 3 தடவை மறுதலித்த அடுத்தக் கணமே, தன் ஆண்டவரின் முகத்தைப் பார்த்து விட்டான்! இவ்வாறாகவே* **"பேதுருவும் தன்னுடைய பெனியேலைக்"** *கண்டடைந்துவிட்டான்! "அப்பொழுது கர்த்தர் திரும்பி பேதுருவை நோக்கிப் பார்த்தார்" (லூக்.22:61) என்ற இந்த இனிய வசனம் எத்தனை பரவசமுள்ளது என்பதை எண்ணிப் பாருங்கள். அவர் திரும்பிப் பார்த்தது, "இவ்வாறு என்னை மறுதலிப்பாய் என்று முன்பே நான் உன்னை எச்சரித்தேன் அல்லவா" எனக் கூறுவதாயில்லாமல், அந்த அன்பின் பார்வை, "இந்த மோசமான நிலையிலும், நீ இருக்கும் வண்ணமாகவே உன்னை நான் அன்புகூருகிறேன். நீ என்மீது கொண்ட விசுவாசத்தை மாத்திரம் இழந்துவிடாதே! அது போதும், இந்த வீழ்ச்சியிலிருந்து உன்னை நான் மீட்டுக் கொள்வேன்" எனக் கனிவுடன் கூறுவதாகவே இருந்தது!! இவ்வாறு ஆண்டவர் பேதுருவைச் சந்தித்ததால் ஏற்பட்ட விளைவு என்ன தெரியுமா? "அவன் வெளியே போய், மனங்கசந்து அழுதான்!" (வசனம் 62) என்ற இனிய நிகழ்ச்சியேயாகும். இயேசுவிடம் அவன் சந்தித்த கனிவான அன்பும், தயவான மன்னிப்பும் இந்த முரட்டு மீனவனின் இருதயத்தை நொறுங்கச் செய்து விட்டது! அல்லேலூயா!!*

*பழைய உடன்படிக்கையில் தேவன் இஸ்ரவேலருக்கு சுகத்தையும், செல்வத்தையும் மற்றும் பல பொருளாதார ஆசீர்வாதங்களையும் தருவதாகவே வாக்குத்தத்தம் செய்திருந்தார். ஆனால் இந்த ஆசீர்வாதங்கள் எல்லாவற்றிற்கும் சிகரமான அதி உன்னதமான ஓர் ஆசீர்வாதத்தை எண்ணாகமம் 6:22-26 வசனங்களில் நாம் காண்கிறோம். இந்த வசனங் களில், ஜனங்களை* **ஆரோன்** *எவ்வாறு ஆசீர்வதிக்க வேண்டுமென தேவன் அவனுக்கு கட்டளை கொடுத்திருந்தார். அந்த உன்னதமான ஆசீர்வாதம் என்னவெனில், "கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து,* **தம்முடைய முகத்தை** *உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி,* **தம்முடைய முகத்தை** *உன்மேல் பிரசன்னமாக்கி, உனக்கு சமாதானம் கட்டளையிடக்கடவர்" என்பதேயாகும்.*

**இவ்வாறு நம்முடைய முழு ஜீவியத்தையும் மறுரூபப்படுத்தும் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் சிகரமான "தேவனை முகமுகமாய் சந்திக்கும் ஆசீர்வாதத்தை" இன்றைய கிறிஸ்தவர்கள் தேடாமல் . . . சாதாரண அற்ப ஆசீர்வாதங்களாகிய சரீர சுகத்தையும், செல்வத்தையும் நாடித் தேடுவது பரிதாபமல்லவா!**

*இப்பூமியில் நாம் ஒருபோதும் ஐஸ்வர்யவான்களாய் ஆகாதிருந்தும், சுகம் கிடைக்காதிருந்தும்..... ஆண்டவருடைய முகத்தை மாத்திரம் தரிசிக்கக் கூடுமென்றால், அது ஒன்றே போதும்! நம் தேவைகள் எதுவானால் என்ன? அத்தனையையும் "அது ஒன்றே" பூர்த்தி செய்து விடும்!*

*யோபு தேவனைச் சந்தித்தபோது அவன் சரீரம் முழுவதும் பருக்கள் உடையவனாகவே இருந்தான்! ஆனால் என்ன ஆச்சரியம், அவனோ தேவனிடம் தனக்கு சுகத்தைக் கேட்கவேயில்லை!! அதற்கு மாறாக "என் கண்களால்* **அவரை நான் கண்டேன்**.... *அது ஒன்றே எனக்குப் போதும்!" என்றல்லவா கூறி விட்டான். யோபுவைச் சூழ இருந்த 3 - பிரசங்கிகள் தங்களுக்கு ஏதோ "பகுத்தறியும் வரம்" இருப்பது போலவும் "தேவனுடைய வார்த்தை தங்களுக்கு உண்டானதுபோலவும்" யோபுவைப் பார்த்து, அவனுடைய ஜீவியத்தில் "இரகசிய பாவங்கள்" இருக்கிறபடியால் தேவன் அவனைத் தண்டித்திருக்கிறார் என்றே கூறிவிட்டார்கள். இவ்வாறு "கர்த்தர் சொல்லுகிறார்" என தங்களுக்குத் தாங்களே தீர்க்கதரிசிகளாய் நியமித்துக் கொண்ட அநேகர் பொய்யான செய்திகளைக்கூறி, தேவனுடைய ஜனத்தை மிகுந்த ஆக்கினையின் கட்டுக்குள்ளாக வைத்து விடுகிறார்களே! ஆனால் தேவனோ இந்த 3 - பிரசங்கிகளைப் போல் யோபுவிடம் சிறிதேனும்கூட பயமுறுத்தும் வார்த்தைகளைக் கூறவேயில்லை!!*

*மேலும் தேவன் யோபுவிடம் அவனுடைய தோல்விகளைக் குறித்தோ அல்லது தன்னுடைய* **நெருக்கத்தின் மத்தியில்** *தேவனிடத்தில் முறுமுறுத்து குறைகூறிய அவனுடைய வார்த்தைகளையோ அவனுக்கு மீண்டும் ஞாபகப்படுத்தவேயில்லை! மாறாக தன்னுடைய அன்பையும் மனதுருக்கத்தையுமே யோபுவுக்கு அவர் வெளிப்படுத்தினார். ஆம், மனுஷனுடைய மகிழ்ச்சிக்காகவே அவர் சிருஷ்டித்த அண்டசராசரத் திற்கும் பின்னாக வைத்த 'சௌந்தரியத்தில்' தன்னுடைய கனிவான அன்பை தேவன் வெளிப்படுத்தியிருக்கிறாரே! மனுஷனுக்குக் கீழாக அடங்கியிருக்கும்படி சிருஷ்டித்த பிராணிகளில் அவருடைய அன்பைக் காண்கிறோமே!! இவ்வாறு தேவனுடைய அன்பைக் குறித்து யோபு கண்ட வெளிப்பாடே அவனை மனந்திரும்புதலுக்கு நேராய் நடத்தியது. இன்று அநேகர் தேவனுடைய கனிவான அன்பை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு துர்பிரயோகம் செய்வதையே நாம் எங்கும் காண்கிறோம். ஆனால் அதே தேவ அன்பு, யோபுவை மனந்திரும்புதலுக்கே நடத்தியது. இதைக் கண்ணுற்ற ஆண்டவர், ஆரம்பத்தில் அவன் பெற்றிருந்த யாவற்றிலும் 2-மடங்காய் கூட்டி வழங்கி அவனை ஆசீர்வதித்துவிட்டார்!*

*யாக்கோபு 5:13-ல் வாசிக்கிறபடி, "நம்மைத் தேவன் நொறுக்குவதற்கு சித்தங்கொண்ட அவரது முடிவான நோக்கம் : நம்மை ஆசீர்வதிக்க வேண்டும் என்பதுதான்!!" அவனுடைய சுயநீதியையும், அவனுடைய*

*பெருமையையும் சிதறச் செய்வதின் மூலம் அவனை ஓர் நொறுங்குண்ட மனிதனாகச் செய்து.... அதன்மூலமாய் தன்னுடைய முகத்தை அவன் காணும்படி கடாட்சித்து அவனை சம்பூரணமாய் ஆசீர்வதிக்க வேண்டு மென்பதே, தேவன் யோபுவைக் குறித்து தன் மனதில் கொண்டிருந்த இலக்காய் இருந்தது! தேவன் நமக்குத் தந்தருளின பொருளாதார மற்றும் சரீரப்பிரகாரமான ஆசீர்வாதங்களின் பின்னணியில் "அவருடைய முகத்தை" நாம் காணத் தவறினால், இந்த ஆசீர்வாதங்களே நம்மைத் தேவனிடமிருந்து விலகச் செய்து முற்றிலுமாய் அழித்துப்போடும். இவ்வாறு பொருளாதார ஆசீர்வாதத்தின் மூலமாய் தேவனிடமிருந்து தூர விலகிப்போன விசுவாசிகள் இன்று நம்மைச் சுற்றிலும் ஏராளம் ஏராளமாய் இருக்கிறார்கள்!*

*ஆண்டவர் முகத்தின் ஒரே ஒரு தரிசனம், இந்த உலகம் வாரி வழங்கும் எண்ணற்ற ஏக்கங்களிலிருந்து நம்மை பூரணமாய் விடுதலை செய்து விடுமே!*

"சுடர்வீசும் உம் முகம் எனக்குக் காட்டும்
அந்த தெய்வீக அன்பின் வெள்ளத்தில்
யாதொன்றை சிந்திக்கவோ ஏங்கிடவோ மாட்டேன்
ஆம், உம்மை நேசிக்கும்....
நேசம் ஒன்று தவிர!
இனி, சூழ்ந்திருக்கும் குறைவான வெளிச்சம்
இருளில் அடங்கட்டும்!
இனி, சூழ்ந்திருக்கும் குறைவான மகிமைகள்
வாடி மறையட்டும்!
ஆம், இவ்வுலகத்தின் சௌந்தரியம்
மீண்டும் எனக்கு....
சௌந்தரியமாய் தோன்றாதிருக்கட்டும்!"

*ஆண்டவர் முகத்தைத் தரிசித்த பேதுரு மனங்கசந்து அழுதான்! இவ்வாறு, முடிவில் பேதுரு நொறுங்கிவிட்டதாக நாம் எண்ணக்கூடும். ஆனால் பேதுருவோ இன்னமும் நொறுங்கவில்லை! இந்தப் பேதுரு "பெனியேலை" சந்தித்திட ஆயத்தமாவதற்கு முன்பாக, மற்றுமோர் வீழ்ச்சியின் அனுபவத்திற்கு ஆண்டவர் அவனை நடத்த வேண்டியதாய் இருந்தது.*

*யோவான் 21:3-ம் வசனத்தில், பேதுரு தன் சக அப்போஸ்தலர்களைப் பார்த்து, "நான் மீன்பிடிக்கப் போகிறேன்!"என்றான். ஏதோ அன்று மாலையில் மாத்திரம்தான் மீன்பிடிக்கப்போவதாக இங்கு அவன் கூறவில்லை. மாறாக, ஓர் அப்போஸ்தலனின் ஸ்தானத்தில் தான் கண்ட தோல்வியினிமித்தம், அந்த ஊழியத்தையே உதறிவிட்டு மீண்டும் நிரந்தரமாய் மீன்பிடிக்கப் போவதையே அவன் குறிப்பிட்டுக் கூறினான்.*

*சில வருடங்களுக்கு முன்பு பேதுருவை ஆண்டவர் அழைத்த போது, இந்தப் பேதுரு தன் மீன்பிடிக்கும் தொழிலை முற்றிலுமாய் விட்டு*

விட்டான். இவ்வாறு தன்னுடைய யாவையும் அவன் வெறுத்து விட்டு ஆண்டவரை மிகுந்த உத்தமத்தோடுதான் பின்பற்றி நடந்தான். ஆனால் இப்போதோ அவன் ஒரு வீழ்ச்சியுற்ற மனிதனாய் இருக்கிறான். இந்த நிலையில் ஓர் அப்போஸ்தலனாய் இருக்கும் ஊழியம் தனக்குத் தகுதியானதல்ல என்றே அவன் எண்ணினான். பார்த்தீர்களா, இந்த உலகத்தில் இதுவரை பிரசங்கிக்கப்படாத மகிமையான பிரசங்கங்களை, இதுவரை வாழ்ந்திராத ஓர் மாபெரும் பிரசங்கியின் மூலமாய் 3½ ஆண்டுகள் கேட்டு பரவசமடைந்த பேதுரு, அந்த ஆண்டவரை முகமுகமாய் மறுதலித்துவிட்டான்! அதுவும் ஒரு முறையல்ல . . . 3-முறை மறுதலித்தான்!! தான் இனியும் ஒரு அப்போஸ்தலனாக இருப்பதற்கு **சிறிதேனும் தகுதியற்றவன்** எனவும் தெளிவாய் கண்டுகொண்டான்!!

ஆனால், இவன் இன்னமும் சிறப்பாகச் செய்யக்கூடிய "மீன்பிடிக்கும் தொழில்" ஒன்று மாத்திரமே அவனுக்கு முன்பாய் இருந்தது. இந்தத் தொழிலை அவன் ஒரு சிறு பையனாய் இருந்த காலம் முதல் செய்தபடியால், அதிலே அவன் கை தேர்ந்தவனாயும் இருந்தான். ஆகவேதான், மீண்டும் ஒரு மீனவனாய் மாறுவதற்கு அவன் தீர்மானித்து விட்டான்! அவனோடிருந்த அப்போஸ்தலர்களில் சிலர்கூட அவனைப் போலவே தீர்மானம் செய்தார்கள்!! இவர்களும், ஆண்டவருடைய நெருக்கமான நேரத்தில் அவரைக் கைவிட்டு ஓடிப்போனவர்கள்தான். ஆகவே ஓர் அப்போஸ்தலனின் தகுதியில் தோல்வியடைந்த இவர்கள் மீண்டும் மீன்பிடிக்கத் திரும்பி விட்டார்கள்.

இவர்கள் யாவருமே உண்மையான புருஷர்கள்தான். இவர்கள் யாவரும் இயேசுவின் செய்திகளை மெச்சிக்கொண்டு, அவைகளைக் கேட்டதினிமித்தம் அவர்களுடைய இருதயம் கொளுந்துவிட்டு எரிந்ததும் உண்மைதான். இவர்கள் மெய்யாகவே இயேசுவின் முழு இருதயம் கொண்ட சீஷர்களாய் இருப்பதற்கே வாஞ்சித்தார்கள்.... ஆனால், இப்படிப்பட்ட இவர்கள்கூட வீழ்ச்சியடைந்து தோற்றுப் போனார்கள்!

உங்களுடைய அனுபவம்கூட இவர்களுடைய அனுபவங்கள் போலவே இருக்கக்கூடும். நீங்களும் வல்லமையான செய்திகளைக் கேட்டு உள்ளத்தில் பரவசம் அடைந்திருக்கக் கூடும். அவர்களைப் போலவே தேவனுடைய வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில், உங்கள் இருதயம் கொளுந்துவிட்டு எரிந்திருக்கக்கூடும். உங்களுக்கான யாவற்றையும் வெறுத்து விட்டு நீங்களும் மிகுந்த உத்தமத்தோடு ஆண்டவரைப் பின்பற்றியிருக்கக்கூடும். ஒருவேளை, உண்மையான செய்திகளைக் கேட்ட ஒவ்வொரு சமயமும் மறுபடியும் மறுபடியும் "தீர்மானங்கள்" பல செய்திருக்கக்கூடும். அல்லது, திரும்பத் திரும்ப ஏற்பட்ட தோல்விகளால் மனம் வெதும்பி "இந்தத் தடவை எடுக்கும் தீர்மானத்தை நான் நிச்சயம் நிறைவேற்றுவேன்" என்றும் உங்களைப் பார்த்தே நீங்கள் கூறியிருக்கக் கூடும். இவ்வாறெல்லாம் இருந்தும் நீங்களோ வழிதவறி மீண்டும் தோல்வியடைந்துவிட்டீர்கள்! இன்று உங்கள் வாழ்க்கையை

*நீங்கள் திரும்பிப்பார்க்கும்போது தோல்விகளுக்குமேல் தோல்வி யடைந்து.... அவைகள் ஆயிரக்கணக்கில் குவிந்து கிடப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். இந்த நிலையில் உங்களில் சிலர் சொல்லிமுடியா அதைரியங்கொண்டு "இனி எந்தப் பிரயோஜனமுமில்லை. இந்த வாழ்க்கையை கைவிட்டுவிட வேண்டியதுதான்! ஒருவேளை, இந்தச் சுவிசேஷம் மற்றவர்களுக்கு வேண்டுமானால் பலனளிக்கக்கூடும்.... ஆனால் எனக்கோ இது பலனளிப்பதாகத் தோன்றவில்லை. நான் யாரைக் காட்டிலும் ஏராளமாய் பின்மாறிவிட்டேன். இனி காரியம் ஒருபோதும் எனக்கு கைகூடாது" என சோர்வடைந்திருக்கக்கூடும்!!*

*மேற்கண்டவாறே இன்று உங்கள் சிந்தையும் இருக்கிறதா? "இனி நான் முயற்சிக்கப் போவதில்லை, அவ்வாறு முயற்சித்து எந்தப் பயனுமில்லை!" என்று நீங்கள் முடிவு செய்து விட்டீர்களா? உலகத்திற்குத் திரும்பிச் சென்று அதன் செல்வத்தையும் அல்லது அது வழங்கும் மாயையான இன்பத்தையும் நாடுவதற்கே தீர்மானித்து விட்டீர்களா? ஆண்டவராகிய இயேசுவின் சீஷன் என கூறிக்கொண்டு "ஓர் பாசாங்கு கிறிஸ்தவ வாழ்க்கை" வாழ்வதைவிட முழுக்க முழுக்க ஓர் உலகத்தானாய் வாழ்வதே மேலானது என எண்ணத் துவங்கிவிட்டீர்களா?*

*ஆம், இவ்வாறு நீங்கள் எண்ணுவதைப் போல்தான் அன்று அந்த அப்போஸ்தலர்களும் "மீன்பிடிக்கத் திரும்பிச் செல்ல தீர்மானித்த போது" எண்ணினார்கள். அவர்களுடைய எண்ணத்தைக் கண்ட ஆண்டவரும் அவர்களுக்கு அனுமதி அளித்து "நீங்கள் போக விரும்பும் இடத்திற்குப் போங்கள்! மீன்பிடிக்க முயற்சித்து காரியம் உங்களுக்கு சித்தியாகிறதா என்பதைப் பாருங்கள்!?" எனக் கூறிவிட்டார். ஆகவே பேதுருவும் அவனுடைய நண்பர்களும் மீன்பிடிக்க இராமுழுவதும் முயற்சித்து, படுமோசமாய் தோற்றுப்போனார்கள். இத்தனை கால அவர்களின் மீன்பிடி வாழ்க்கையில், இதுபோன்ற மோசமான ஒரு இராத்திரியை அவர்கள் அனுபவித்ததேயில்லை!!*

> **"தனக்குச் சொந்தமாய் இருக்கும்படி" தேவன் உங்களை அழைத்து விட்டால், உங்களை அவர் ஒருபோதும் விட்டுவிட மாட்டார். அப்படியே நீங்கள் போய் மீன்பிடிக்கச் சென்றாலோ அல்லது வேறு எதைச் செய்தாலோ அதில் நீங்கள் நிச்சயமாய் தோல்வி அடைவதில் கருத்தாய் இருப்பார்!**

*நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் முயற்சித்துப் பார்க்கலாம். ஆனால், நீங்களோ நிச்சயமாய் தோல்வியைத்தான் சந்திப்பீர்கள். ஆம், தேவனால் பிரித்தெடுக்கப்பட்ட உங்கள் வாழ்க்கை இவ்வுலகஅற்பமான வைகளில் வீணாவதை, தேவ அன்பு ஒருபோதும் உங்களை அனுமதிக் காது! ஆகவே, நீங்கள் அவரைவிட்டு ஓடுவதற்கு முயற்சித்தால் நீங்கள் எங்கு சென்றாலும்... என்ன செய்தாலும் அது தோல்வியாகத்தான் முடியும்! நீங்கள் அவரிடம் திரும்ப வரும்வரை இதே நிலைதான் தொடரும்!!*

*ஆனால், இந்த சத்தியமோ ஆண்டவரால் அழைக்கப்படா*

*தவர்களுக்குப் பொருந்தாது! இன்று எத்தனையோ குறுக்கு வழி வியாபாரிகள், அரசியல்வாதிகள் ஏராளமான கருப்புப் பணத்தை சம்பாதித்தபோதும்.... அவர்களோ "தேவனற்றவர்களாய்" இன்றும் செழித்த சுகத்துடன்தான் ஜீவிக்கிறார்கள். அவ்வாறு இருக்கும்படி தேவன் அவர்களை ஏன் அனுமதித்துவிட்டார்? ஏனென்றால்.... அவர்கள் அவருடைய பிள்ளைகளல்ல! அவ்வளவுதான். இங்கோ நான் அவர்களைக் குறிப்பிட்டுப் பேசவேயில்லை. நானோ, இவ்வுலகத் தோற்றத்திற்கு முன்பே "தனக்குச் சொந்தமாய் இருக்கும்படி" தேவன் அழைத்த உங்களைக் குறித்தே இப்போது பேசிக்கொண்டிருக்கிறேன்.*

*உண்மையில், அந்தக் கலிலேயா கடலோரத்தில் ஏராளமான மீன்கள் இருக்கத்தான் செய்தது. அந்த இராத்திரியில் மற்ற மீனவர்கள் ஏராளமான மீன்களை நிச்சயம் பிடித்திருப்பார்கள். அந்த மீன்கள் அவர்கள் படகுக்கு அருகே தராளமாய் சென்றுவிட்டன! ஆனால் தேவனோ அவைகளில் ஒன்றுகூட பேதுருவின் படகருகில் வராதபடி கருத்தாய் கண்காணித்தார்!! மற்ற மீனவர்கள் திரும்பி வரும்போது, பேதுருவின் படகருகில் வந்து, தங்களுக்கு ஏராளமான மீன்கள் கிடைத்ததாக மகிழ்ச்சியுடன் கூறிச் சென்றார்கள். அவர்களுடைய கூற்று, பேதுருவுக்கும் அவன் சக நண்பர்களுக்கும் "தங்களுக்கு மாத்திரம் ஏன் ஒரு மீன்கூட பிடிபடவில்லை" என்ற கலக்கம் மிகுந்த ஆச்சரியத்தைத் தந்திருக்கக்கூடும்!!*

*உங்களைச் சுற்றியுள்ள மற்றவர்கள் 'பங்கு சந்தையில்' இலாபம் பெற்றிருக்க, உங்களுக்கோ எந்த இலாபமும் கைகூடாதிருந்ததை எண்ணி நீங்கள் கலக்கமும் ஆச்சரியமும் அடைந்ததுண்டா? உங்களுடைய வியாபாரம் மற்றவர்களைப்போல் இலட்சக்கணக்கில் இலாபத்தை ஏன் தரவில்லை என வியந்து நீங்கள் சிந்தித்ததுண்டா?*

**இவ்வாறு உங்களைச் சுற்றியுள்ள ஜனங்கள் பெற்றிருக்கும் சௌக்கியமும் செழிப்பும் உங்களைத் தேடி ஒருநாளும் வரவில்லையே! அது ஏனென்றால், உங்களுடைய ஜீவியத்தில் "தேவனுடைய அழைப்பு" இருக்கிறது! அவ்வளவுதான். ஆம், இந்த உலக ஜனங்கள் பெற்றிருப்பதைவிட மேலான தலைசிறந்ததை நீங்கள் பெறுவதற்கே தேவன் விரும்புகிறார்!!**

*தன் ஜீவியத்தில் தேவன் தந்த அழைப்பைவிட்டு பேதுரு இப்போது திரும்பிச் செல்லத் துவங்கிவிட்டான்! ஆகவே, அவனைத் தோல்வியுறச் செய்து மீண்டும் அவனைத் தேவன் நொறுக்க வேண்டியதாயிருந்தது. நடந்தது என்ன? அந்த அப்போஸ்தலர்கள் மாலை 6-மணிக்கு மீன்பிடிக்கத் துவங்கினார்கள். ஆனால் இயேசுவோ அடுத்த நாள் காலை 5-மணி வரை அவர்களிடம் வரவேயில்லை! அந்த இராத்திரியில் பேதுரு எந்த மீனையும் பிடிக்கப்போவதில்லை என்பது ஆண்டவருக்கு ஏற்கனவே தெரியும். அப்படியிருக்க, அவர்கள் தங்கள் நேரத்தை வீணாக்கிவிடாதபடி மீன்பிடிக்கச் சென்ற அதே நேரத்தில் சீக்கிரமாகவே*

அவர் ஏன் வரவில்லை? குறைந்தபட்சம் அந்த இராத்திரி 9-மணிக்குக்கூட அவர் ஏன் வரவில்லை? அடுத்தநாள் காலை 5-மணி வரை அவர் ஏன் தாமதித்தார்? சுமார் 11-நீண்ட மணிநேரங்கள் போராடி, தோல்வியடைந்து.... தங்கள் **முழு நம்பிக்கையையும் இழக்கும்வரை** அவர் ஏன் காத்திருந்தார்?

இந்தக் கேள்விகளுக்குரிய பதிலில்தான், நம்மைத் தேவன் தோல்வியடைய அனுமதிப்பதில் அடங்கியிருக்கும் "அவருடைய நோக்கத்தை" நாம் அறிந்திடமுடியும். ஆம், இங்குதான் **மனுஷனின் தோல்வியில் தேவனுடைய பரம நோக்கத்தை** நாம் காணமுடியும். நம் ஜீவியத்தில் கடுமையான போராட்டத்தைச் சந்தித்து, திரும்பத் திரும்பத் தேவனுடைய உதவிக்காய் கதறியும் அவர் ஏன் உதவி செய்யவில்லை? என்பதற்கான விடையை இங்குதான் நாம் விளங்கிக்கொள்கிறோம்! நம்முடைய ஊக்கமான பல ஜெபங்கள் ஏன் இன்னமும் "**பதில் அளிக்கப்படாமல்**" இருக்கிறது என்ற கேள்விக்கான விடையையும் இங்குதான் நாம் விளங்கிக் கொள்கிறோம்.

பேதுருவும் அவனுடைய சக நண்பர்களும் மாலை 6-மணிக்கு மீன்பிடிக்கச் சென்றபோது, அவர்களிடம் தோல்வியென்ற வீழ்ச்சியில்லை. நிறைவான நம்பிக்கையோடுதான் அவர்கள் சென்றார்கள். இரவு 9-மணியாகியும் அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை.... இப்போது, சிறிதளவு சோர்வு அவர்கள் இருதயத்திற்குள் பிரவேசித்தது. இருப்பினும் அவர்களின் மீன்பிடி முயற்சி "தோல்வி" என இன்னமும் முத்திரையிடப்படவில்லை! இரவு 12-மணிக்கு இன்னமும் மீன் கிடைக்காததால் அவர்களுக்கு "அதிக சோர்வு" உண்டானது. அடுத்த நாள் காலை 4-மணி ஆனதும் அவர்களுடைய எல்லா நம்பிக்கையும் அவர்களிடமிருந்து பறிபோனது!! இருப்பினும் அவர்கள் இன்னமும் "முழுத்தோல்விக்கு" (TOTAL FAILURES) இன்னமும் வரவில்லை. தோல்வியின் நிறைவை அடைவதற்கு 'இன்னும் கொஞ்சம் தோல்வி' வந்துசேர வேண்டியதாய் இருந்தது. இந்த அப்போஸ்தலர்களின் சுயநம்பிக்கையின் வரைபடப்புள்ளி (GRAPH) கீழ் நோக்கிச் சென்று கொண்டேயிருந்தது. இருப்பினும் அது பாறையின் பாதளமாகிய "**பூஜ்ஜியத்தை**" இன்னமும் அடையவில்லை. இப்போது காலை 5-மணி ஆகிவிட்டது..... வரைபடத்தின் புள்ளி பூஜ்ஜியத்தைத் தொட்டு விட்டது! இங்கேதான் அவர்கள் எல்லா நம்பிக்கையையும் இழந்தார்கள். இப்போதுதான், "இனியும் முயற்சித்து பிரயோஜனமில்லை. வீடு திரும்ப வேண்டியதுதான்!" என அவர்கள் மனமுடைந்து கூறினார்கள்.

ஆம், **இந்த இடத்தில்தான்** ஆண்டவர் தோன்றினார்! இதுவே தேவனுடைய வழியாய் இருக்கிறது. என்ன ஆச்சரியம், இப்போது அவர்களுடைய வலை கிழியும் அளவுக்கு மீன்களால் நிறைத்து விட்டார்!! இவர்கள் தங்கள் ஜீவியகாலத்தில் இதுபோன்றதொரு நல்ல மீன்பிடியை ஒருநாள்கூட பெற்றதேயில்லை!! அந்த அதிகாலையில் 153 பெரிய

மீன்களை அவர்கள் பிடித்தார்கள். மற்ற நாட்களில் அவர்கள் நன்றாகப் பிடிப்பதே சுமார் 20 அல்லது 30 பெரிய மீன்கள் மட்டும்தான்! ஆனால், இப்போது அவர்கள் பிடித்ததோ ஓர் வியக்கத்தகுந்த அற்புதமேயாகும். அந்தக் கடலோரத்தில், இதுவரை ஒருவர்கூட இவ்வளவு மீன்களை ஒரேநாளில் பிடித்தது இல்லை. இவ்வளவு பெரிய மீன்பிடி, கலிலேயாவின் மீன்பிடிப்போர் சங்கத்தின் பதிவேட்டில் எழுதக் கூடியதாய் மாறியது. அந்தப் பதிவேட்டை இவர்கள் பார்க்கும் போதெல்லாம், "எல்லா நம்பிக்கையையும் இழந்த சமயம்" ஆண்டவர் அவர்களுக்குச் செய்த அற்புதத்தை மகிழ்ச்சியுடன் நினைவுகூறுவார்கள்!! ஆ, எத்தனை பரவசம்!!

இன்று நீங்களும் "முயற்சியின் முடிவிற்கு" வந்துவீட்டீர்களா? எந்த வழி திரும்புவது? அடுத்து என்ன செய்வது? என அறியாது திகைக்கிறீர்களா? ஏனெனில், நீங்கள் எத்திசைத் திரும்பி முயற்சிக்கிறீர்களோ, அத்திசைகளிளெல்லாம் தோல்வியையும் ஏமாற்றத்தையுமே கடந்த காலத்தில் அனுபவித்து விட்டீர்கள். உங்கள் காரியம் அப்படியாயிருக்குமென்றால், ஆண்டவர் உங்களிடத்தில் தோன்றி நெருங்கும் நேரம் மிக சமீபித்துவிட்டது என்பதை அறியுங்கள்! ஆகவே, சிறிதுகூட மனம் தளர்ந்துவிடாதிருங்கள். உங்கள் சுய-நம்பிக்கை "பூஜ்ஜிய நிலையை" அடைவதற்காகவே அவர் இதுவரை காத்திருந்தார்!

**இதுவரை அவர் உங்களிடத்தில் வராததற்கு, உங்கள் சுய நம்பிக்கையின் வரைபடப்புள்ளி (GRAPH) "பூஜ்ஜிய நிலையை" இன்னமும் தொடவில்லை என்ற ஒரே காரணமேயாகும்!**

உங்கள் சுயத்தில் இன்னமும் கொஞ்சம் "பெலன்" ஒட்டியிருப்பதையே அவர் காண்கிறார். அந்தப் பெலனும் குன்றி அழியவேண்டும்! ஆண்டவர் வருவதற்கு முன்பாக "அந்த லாசரு" மரித்து, மரணமடைந்து... .அடக்கம் செய்யப்படவேண்டும்!!

அந்த அதிகாலை நேரத்தில் ஆண்டவர் கடலோரமாய் வந்த போது அவர்களிடத்தில் என்ன கேட்டார் தெரியுமா? அவர்களிடம் ஒரு மீன்கூட இல்லை என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். இருப்பினும், அவரோ அவர்களைப் பார்த்து, "பிள்ளைகளே, புசிப்பதற்கு ஏதாகிலும் மீன் உண்டா?" என்று கேட்டார். இந்தக் கேள்விக்கு முதலில் ஒருவர்கூட பதில் சொல்ல முடியவில்லை. ஒருவேளை ஆண்டவர் இயேசு இந்தக் கேள்வியை இரண்டாவது முறையாகக் கேட்டிருக்கக்கூடும். இப்போது தான் அவர்கள் தங்களின் முழுத்தோல்வியையும் ஒத்துக்கொண்டார்கள்! தங்களுக்கு முன்னோடியாயிருந்த யாக்கோபையும், யோபுவையும் போல இவர்களும் நேர்மையாய் நடந்துகொண்டார்கள். **இவ்வாறு தங்களின் "முழுத் தோல்வியையும்" மனத்துக்கத்துடன் ஒத்துக்கொள்ளும் இந்த இடத்தையே ஆண்டவர் அவர்களிடம் விரும்பினார்.**

"நம் வாழ்வின் எந்த சூழ்நிலையிலும் **நேர்மையாய்** இருப்பது

ஒன்றையே தேவன் நம்மிடத்தில் நாடுகிறார்'' என்ற இந்த மகிமையான சத்தியத்தை நான் கண்டுபிடித்ததே என் வாழ்வின் பிரதான மகிழ்ச்சிக்கு அடிகோலியாய் மாறியது. ஆம், அவர் அப்போதுதான் நமக்காக எந்த அற்புதத்தையும் செய்யமுடியும்.

ஏதாவது மீன் பிடித்தீர்களா? அதற்குப் பதில் : இல்லை! "உங்கள் வலையை வலதுபக்கம் போடுங்கள்!''..... அவ்வளவுதான், அங்கே ஒரு மாபெரும் அற்புதம் நிகழ்ந்தது!!

உங்கள் பெயர் என்ன?.... அதற்கு நேர்மையான பதில் : "எத்தன் அல்லது ஏமாற்றுபவன்!'' அவ்வளவுதான்.... "இனி உன் பெயர் ஏமாற்றுபவன் அல்ல.... நீயோ தேவனுடைய இளவரசன்!'' ஆ, இங்கே ஒரு அற்புதம் நிகழ்ந்துவிட்டதே!!

எனது அருமை சகோதர, சகோதரிகளே இதுதான் தேவனுடைய வழி! நம்மிடத்தில் தேவன் எதிர்பார்க்கிற ஒன்றே ஒன்று இந்த "**நேர்மைதான்!**''

இன்றிலிருந்தாவது, நீங்கள் தேவனிடம் நேர்மையாய் இருந்ததுவிட முடியுமா?

நம்முடைய சபை ஒரு மருத்துவமனைக்கே ஒப்பாகும். சபையிலிருக்கும் நாம் அனைவருமே நோயாளிகள்தான்! நாம் ஒன்றும் ஸ்பெஸலிஸ்டோ அல்லது வலிமை கொண்ட திறமைசாலிகளோ அல்ல. நம்மில் சிலர் இந்த மருத்துவமனையில் மற்றவர்களைக் காட்டிலும் பல வருடங்களாய் இருந்து வருகிறோம். இருப்பினும், நாம் எல்லோருமே நோயாளிகள்தான். ஒரே ஒரு மருத்துவர் மாத்திரமே சபையில் உண்டு.... அந்த ஒருவர்தான் இயேசு! சபையாகிய மருத்துவமனையில் ஒரு கன்சல்டெண்ட் கூட (CONSULTANT) இருப்பதில்லை. சுயநீதியில் வலிமை கொண்ட, ஊழியர்களை ஆராதனை செய்யும் மார்க்க கண்மூடித்தன குழுவில்தான் (CULTS) இந்த ஸ்பெஸலிஸ்டுகளும், கன்சல்டெண்டுகளும் உண்டு! மாறாக, ஜீவனுள்ள தேவனுடைய சபையில் இதுபோன்றவர்கள் காணப்படவே முடியாது. நம் மருத்துவமனைக்கு யார்வேண்டுமானாலும் வரலாம். அனைவரும் அங்கு வரவேற்கப்படுவார்கள். உங்கள் வியாதி எவ்வளவு மோசமாய் இருக்கிறதோ, அவ்வளவு அதிகமாய் சபையின் நடுவில் நீங்கள் இருந்து சுகம் பெற்றிடவேண்டியது அவசியம்! நாம் மிகுந்த உரத்த சத்தமாய் நம்மைச் சூழ இருக்கும் அனைவரும் கேட்கும்படி அறைகூவும் செய்தி யாதெனில், "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு இவ்வுலகத்துக்கு வந்தார்.... அவர்களில் பிரதான பாவிகள் நாங்கள் தான்!'' என்ற செய்தியேயாகும்.

யாதொரு தகுதிக்கும் பாத்திரராய் இல்லாதவர்களையே தேவன் எப்போதும் சந்திக்கிறார்! தேவாலயத்தில் ஆயக்காரன் ஜெபிக்கும் போது, "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்'' என்றே ஜெபித்தான்

*(லூக்கா 18:13). அவன் தன்னை ஆங்கிலத்தின்படி,* "THE SINNER" *அதாவது* **“பிரதான பாவி”** *என்றே கூறினான். அதன் பொருள் யாதெனில், அவன் தன்னை ஒப்பிடும்போது தன்னைச் சூழ இருந்த யாவரையும் பரிசுத்தவான்களாகவே உணர்ந்தான்! அவனுடைய பார்வையில், இந்த அண்ட சராசரத்தில் அவன் ஒருவன் மாத்திரமே பாவி!! இயேசு அவனைக் குறித்து மனமகிழ்ந்து கூறும்போது, “இவனே நீதிமானக்கப்பட்டவனாய் தன் வீட்டிற்குத் திரும்பிப் போனான்” எனக் கூறினார். ஆம், இன்றும் தேவன் இதுபோன்ற ஜனங்களுக்கு மாத்திரமே தன் நீதியின் வஸ்திரத்தைத் தந்தருளி அவர்களை நீதிமான்களாக்கி மகிழ்கிறார்.*

*“நீதிமானாகுதல்”* (JUSTIFY) *என்ற வார்த்தையின் அர்த்தத்தை நான் சற்று விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். இந்த வார்த்தையில் அடங்கியிருக்கும் செய்தி, நம்மை அத்தனையாய் விடுதலை செய்யும் ஓர் வசீகரமான செய்தியாகும்!! (லூக்கா 18:14).*

*அதன் விளக்கம் யாதெனில் : இந்தப் புத்தகத்தின் பக்கங்களைச் சற்றே பாருங்கள். எவ்வாறு இடதுபக்கத்தில் வரிகள் சீராகத் துவங்கியிருக்கிறதோ அதேபோலவே வலதுபக்கத்திலும் சீராக ஒரே ஒழுங்கில் எழுத்துக்கள் முடிவடைந்திருப்பதைப் பாருங்கள். இவ்வாறு ஒவ்வொரு பக்கத்தின் இடது பக்கமும் வலதுபக்கமும் உள்ள வார்த்தைகள் ஒரே கோடுபோல் அமைந்திருப்பதை நீங்கள் பார்க்கலாம். இதைத்தான் இன்றையக் கம்ப்யூட்டர் மொழியில் வேதம் கூறும்* "JUSTIFICATION" *(நீதியாக்கப்படுதல்) என்ற வார்த்தையில் கூறுகிறார்கள்! ஒவ்வொரு வரியிலும் வித்தியாசமான எண்ணிக்கையில் வார்த்தைகள் இருந்தபோதும் இந்தக் கம்ப்யூட்டர் இயந்திரம் வலப்புறத்தின் ஓரம் சீராய் இருக்கும்படி செய்துவிடுகிறது. இவ்வாறு* "JUSTIFYING" *என்ற கட்டளையில்லாமல் கம்ப்யூட்டர்களில் எழுத்துக்களை டைப் செய்தால், வலதுபக்கத்தில் முடிவு கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ ஏற்ற இறக்கமாய்தான் முடிவடையும். இவ்வித ஒழுங்கற்ற அமைப்பில்தான், நாம் பழைய நாட்களில் உபயோகித்த தட்டெழுத்து இயந்திரத்தில் வருவதுண்டு. ஒரு புத்தகத்தின் ஒருபக்கத்தில் கூட ஒவ்வொரு வரியும் ஒரேயளவு நீளத்தில் தட்டெழுத்துப் பதிவது கூடாததாய் இருக்கிறது. ஆனால் இப்போதோ,* "JUSTIFICATION" *“நீதியாக்கப்படுதல்” என்ற அற்புதத்தைக் கம்ப்யூட்டர் இயந்திரத்தில் காண்கிறோம். இந்த ஒழுங்கை ஒவ்வொரு வரியின் கடைசி வார்த்தையில் ஒரு துணைக் கோட்டை* (HYPHEN) *போடுவதால் வருவதல்ல! இந்தப் புத்தகத்தையே மீண்டுமாய் சற்று பாருங்கள்.... ஒரு இடத்தில்கூட துணைக்கோட்டை நீங்கள் காணமுடியாது. அவ்வாறு இருக்கு மென்றால், புத்தகத்தின் அழகு கெட்டுவிடும். ஆகவே இந்த கம்ப்யூட்டர் இயந்திரம் ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் உள்ள இடைவெளியை அதுவாகவே ஒழுங்கமைத்து அந்த வரியானது சீரானக் கோட்டில்*

"JUSTIFY"*ஆகச் (நீதியாக்கப்படச்) செய்கிறது!*

*நீங்கள் ஒரு பக்கத்தில் டைப் செய்த 30 வரிகளும் ஏற்ற இறக்கமான நீளத்தில் முடிவடைந்திருந்தால், நீங்கள் எழுதியயாவையும்* "JUSTIFY" *(நீதியாக்கப்பட) செய்யும்படி கம்ப்யூட்டருக்கு கட்டளை கொடுத்து, அதற்குரிய ஒரு பட்டனை நீங்கள் அழுத்தியவுடன், எல்லா வரிகளும் மிக அருமையாய் சமமான ஒழுங்குக்கு உடனடியாய் வரும் அற்புதத்தை நீங்கள் பார்க்கலாம்!!*

*இதேபோல்தான் தேவன் நம்மை "நீதியாக்கும்போது" சம்பவிக் கிறது. உங்கள் வாழ்க்கையில் ஏராளமான வீழ்ச்சிகள் அடைந்து, உங்கள் கடந்தகால ஒவ்வொருநாள் வாழ்க்கையும் ஏற்றத் தாழ்வாய் முடிவடைந்த நிலையில் இருக்கிறது. ஆனால் நீங்கள் கிறிஸ்துவினிடத்தில் வந்துவிட்டால், தேவன் ஒரு கணப்பொழுதில் உங்களை நீதியாக்கி விடுவார்! அதாவது உங்கள் கடந்தகால வாழ்க்கையின் ஒவ்வொரு வரியும் பூரணமாய் ஒழுங்கு செய்யப்பட்டு, இதுவரை உங்கள் முழு வாழ்க்கையிலும் ஒரு தடவைகூட பாவமே செய்யாததைப்போல், ஏற்றத் தாழ்வு வரிகளில்லாமல் ஒழுங்கும் நேரானதுமான வரியே இருக்கும்!*

*இது ஒரு அற்புதம் அல்லவா? நாம் எழுதும் பக்கங்களுக்கு கம்ப்யூட்டர் இயந்திரம் செய்வதுபோலவே, தேவன் நம் வாழ்க்கையில் செய்கிறார்! "நீதியாக்கப்படுதல்" என்ற அருமையான வார்த்தையை நேர்த்தியாய் விளக்கிட* **கம்ப்யூட்டர் உதாரணமே** *இந்த 20-ம் நூற்றாண்டில் மிகப் பொருத்தமான உதாரணமாகும்!!*

*அது மாத்திரமல்ல, கம்ப்யூட்டரின்* "JUSTIFY" *பட்டன் இன்னும் மேலான அற்புதத்தைச் செய்கிறது. அதாவது, நாம் ஒருமுறை பட்டனை அழுத்தி கட்டளை கொடுத்துவிட்டால்* **அதற்குப் பின்பு எழுதும் ஒவ்வொரு வரியும்** *தானாகவே ஒழுங்கு செய்யப்பட்டு மற்ற வரிகளோடு சமமானச் சீராய் அமைந்து விடும். அதாவது, இந்த நீதியாக்கப்படுதல்* (JUSTIFICATION) *நம்முடைய கடந்தகால வாழ்க்கைக்கு மாத்திரமல்ல, நம் எதிர்கால வாழ்க்கைக்கும் தொடர்ந்து கிரியை செய்வதாகவே இருக்கிறது. இந்தச் சுவிசேஷம் உங்கள் உள்ளத்தில் பிரமிப்பூட்டும் ஆச்சரியத்தைத் தருகிறதல்லவா!!*

*தேவன் நம்மை இப்போது "கிறிஸ்துவுக்குள்ளாகவே" காண்கிறார். நாம் மேன்மை பாராட்டுவதற்கென நமக்கென்று சொந்த நீதி எதுவுமே இனி இல்லை. ஆம், கிறிஸ்துவே நம்முடைய நீதியாயிருக்கிறார்!*

*தேவன் நம்மை நீதிப்படுத்தும்போது, நம் முழு ஜீவியத்தில் எந்தப் பாவமும், எந்தத் தவறும், நாம் ஒருபோதும் செய்யாதவர்களைப்போல ஆக்கிவிடுகிறார். நாம் ஒளியில் நடக்கிறபடியினால்* **கிறிஸ்துவின் இரத்தத்தால்** *நாம் தொடர்ச்சியாய் இவ்வாறாகவே நீதியாக்கப்படுகிறோம். இவ்வாறு, நாம் அறிந்தோ அல்லது அறியாமலோ செய்த சகல*

பாவங்களையும் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சுத்திகரிக்கும் பாக்கியத்தை, ஒளியில் நடக்கும் நாம் யாவருமே பெற்றிருக்கிறோம்.

நம் யாவரிடத்திலும் பொதுவாய் காணப்படும் ஒரு மிகப் பெரிய தவறு யாதெனில், ஓர் கணக்கைத் தீர்ப்பதற்கு உபயோகப்படுத்தும் சட்டரீதியான சிந்தையை வேதப்புத்தகத்தை வாசிப்பதற்கும், அதே போல் பயன்படுத்திவிடுகிறோம். இவ்வாறாக நம்முடைய வழியில் நாம் ஒருக்காலும் தேவனுடைய மனதைப் புரிந்துகொள்ளவே முடியாது. ஏனெனில் நாம் கணக்குத் தீர்க்கும் வழிமுறையைக் கொண்டு தேவன் ஒருபோதும் கிரியை செய்வதேயில்லை! ஆகவே கடந்த காலத்தில் ஏராளமான தவறுகளைச் செய்த பின்பும், தேவன் நம் ஜீவியத்தில் கொண்ட பூரணதிட்டத்தையும் எவ்வாறு நிறைவேற்றுவார் என்பதை நம்முடைய கணக்குப் பார்க்கும் காரணயுக்தியை உபயோகித்து ஒருபோதும் விளங்கிக்கொள்ள முடியாது! கணக்கு ரீதியாய் சிந்தித்தால் தோல்வி பல கண்ட நம் ஜீவியத்தில் நம் வாழ்வைக் குறித்த தேவனுடைய சம்பூரண திட்டம் நிறைவேறுவது இனி ஒருக்காலும் முடியாததுதான்! ஏனென்றால் ஒரு கணக்கைத் தீர்க்கும்போது அதில் 'ஒரு ஸ்டெப்' தவறாய் இருந்தாலும் முடிவிலும் அதன் விடை நிச்சயம் தவறாகவே இருக்கும்!!

இவ்வித காரணயுக்தியை தேவன் நம்மேல் செயல்படுத்துவதாக நீங்கள் கருதினால், உங்கள் **கடந்தகால** ஜீவியத்தில் எங்கோ ஒரு இடத்தில் (அது 2 வயதாய் இருக்கும்போதோ அல்லது 52 வயதாய் இருக்கும் போதோ) தேவசித்தம் செய்யத் தவறியிருந்தால், **இன்று** நீங்கள் ஒருபோதும் தேவனுடைய பரிபூரண சித்தத்தை நிறைவேற்றிட முடியாது என்றே கூறவேண்டும்! நீங்கள் ஒரு கணக்கைத் தீர்க்கும்போது 2-வது ஸ்டெப்பில் தவறு செய்தால் என்ன? அல்லது 52-வது ஸ்டெப்பில் தவறு செய்தால் என்ன? முடிவில் விடை தவறாய் தான் இருக்கும்!! நீங்கள் எவ்வளவு கடுமையாய் முயற்சித்தீர்கள் அல்லது எவ்வளவு அதிகம் மனந்திரும்பினீர்கள் என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை.

ஆனால் இந்த இடத்தில்தான், தேவன் நம்மைப் பார்த்து "உங்கள் வழிகள் என் வழிகள் அல்லவென்று" கூறுகிறார் (ஏசாயா 55:8,9).

இவ்வாறு தேவன் நம் ஜீவியத்தில் கொண்டுள்ள திட்டம் கணக்கு ரீதியாய் செயல்படாதிருப்பதற்காக தேவனுக்கே நன்றிகள் பல உரித்தாகுக! அவ்வாறு கணக்கு ரீதியாய் தேவன் செயல்பட்டால், பவுல் அப்போஸ்தலன் முதற்கொண்டு ஒரு மானிடன்கூட தேவனுடைய பூரணதிட்டத்தை தங்கள் வாழ்க்கையில் நிறைவேற்றி முடிக்கவே முடியாது. ஏனெனில், நாம் யாவருமே ஒரு நேரமில்லாவிட்டாலும் மற்றொரு நேரத்தில் தோல்வியை அடைந்திருக்கிறோம். நாம் விசுவாசிகளாய் மாறிய பின்பும்கூட, அநேக சமயங்களில் தோற்றுப் போயிருக்கிறோம். விசுவாசிகளாய் மாறிய பின்பு, துணிகரமாயுங்கூட பாவம் செய்திருக்கிறோம். **நேர்மை நெஞ்சம்** கொண்ட யாவரும் நான் கூறிய

இக்கூற்றை தயக்கமின்றி ஒத்துக்கொள்வார்கள். இருப்பினும் ஆச்சரிய மான உண்மை யாதெனில், நம் ஒவ்வொருவருக்கும் இன்னமும் நம்பிக்கை உண்டு என்பதுதான்!!

ஒரு சிறு பிழை செய்தாலும், கணக்குப் பாடம் முகதாட்சண்யமின்றி கண்டித்துவிடும். சிறிய தவறுதானே என எந்தச் சலுகையும் இந்த கணக்குப் பாடம் காட்டுவதேயில்லை. 2+2=3.99999999 என்று போட்டால் மிக மிகச் சிறிய இந்தப் பிழையையும் அது ஒத்துக் கொள்ளாது! அதாவது, 2+2=4 தான் இருக்க வேண்டும்! சிறிதளவு கூடவோ அல்லது குறையவோ கூடாது!!

ஆனால் தேவனுடைய திட்டங்களோ இந்த கணக்கு ரீதியில் செயல்படுவதேயில்லை. **அவருடையத் திட்டத்தில் தோல்வி மிகவும் அவசியம்!** நாம் நொறுங்குவதற்கு தோல்வியைத்தவிர வேறு வழி இல்லவே இல்லை. ஆகவே நம் ஆவிக்குரிய கல்வித் திட்டத்தில் தோல்வி “ஓர் முக்கிய பாடத்திட்டம்” என்றே நாம் கூறலாம்.

ஒருமுறை கூட வீழ்ச்சியடையாமல் வாழ்ந்தவர் இயேசு ஒருவரேயாவார். அவரைத் தவிர நாம் யாவரும். . . . நம்மில் மிகச் சிறந்த பரிசுத்தவான்களும்கூட தோல்வியின் மூலமாகவே நொறுக்கப்பட வேண்டியதாய் இருக்கிறது. பேதுருவும் பவுலுங்கூட மறுபடியும் மறுபடியும் ஏற்பட்டத் தோல்வியினாலேயே நொறுக்கப்பட்டார்கள்!

ஆகவே, பேரானந்தம் நிறைந்த இந்த சுவிசேஷத்தின் செய்திக்காக நீங்கள் களிகூறுவீர்களாக . . . தேவனுடைய தயவுள்ள அன்பு நீங்கள் மனந்திரும்பும்படி உங்களை நடத்துவதாக! இந்தச் சுவிசேஷம் ஓர் மகிழ்ச்சியான வாழ்விற்குள்ளும், தேவனுக்குள்ளான பூரண இளைப் பாறுதலுக்குள்ளும் உங்களை நடத்துவதாக! ஆம், நீங்கள் “தேவனுடைய பிரியமான குமாரனுக்குள் நிரந்தரமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டீர்கள்” (எபேசியர் 1:6 - KJV மொழிபெயர்ப்பு) என்ற சத்தியத்தை அறிந்து கொண்டதால் அடைவதே, இந்த இளைப்பாறுதல்!

நாம் யாவருமே ஒவ்வொருநாளும் எத்தனையோ தவறுகளைச் செய்கிறோம். அது தற்செயலாகவோ அல்லது அறியாமல் செய்வதாகவோ இருந்தாலும், எத்தனையோ பாவங்களில் சறுக்கி விழுந்து விடுகிறோம். சிலசமயங்களில் இவ்வித வீழ்ச்சியின் அழுத்தங்கள் பெரும் சுமையாக நமக்கு மாறுவதால் மனமடிவும், அதைரியமும் கொண்டு அதனிமித்தமாய் .... இன்னும் அதிகமான பாவங்களைச் செய்திடவே சோதிக்கப்படுகிறோம். நம்மை அழுத்தும் இவ்வித பாரங்களைத் தேவன் விளங்கிக் கொள்வதால், நம்மீது மிகுந்த மனதுருக்கமே கொள்கிறார்!! ஆகவே நம்முடைய திராணிக்கு மேலாய் நாம் சோதிக்கப்பட அவர் இடந்தராமல், சோதனைகளின் நடுவே ஓர் தப்பிக்கும் வழியையும் அவரே உண்டு பண்ணித் தருகிறார். **இவ்வாறு நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும், எதையும் செம்மைப்படுத்தி நேராக்கிவிட அவரால் முடியும்!!**

மனுஷீகக் காரணங்களை மையமாகக் கொண்டு கிறிஸ்தவ வாழ்க்கை இயங்குவதேயில்லை. அற்புதக் கிரியை செய்யும் வல்லமை! ஓர் அன்புள்ள பரமபிதாவின் பூரண ஞானம்! அவரின் பூரண அன்பு! ஆகியவைகளை மையமாகக் கொண்டே கிறிஸ்தவ வாழ்க்கை இயங்குகிறது!!

இதற்கு முன் குறிப்பிட்டதுபோல், பிழையற்ற வரிகள் கொண்ட ஓர் சீரான வடிவமைப்பில் நம்மில் ஒருவர் கூட தங்கள் வாழ்க்கையை "டைப்" செய்துவிட முடியாது! நம் ஒவ்வொருவரையும். . . . ஏன், நம்மில் தலைச்சிறந்த பரிசுத்தவானையும் தேவனே நீதிமானாகச் செய்கிறவர்! நம்மில் ஒருவர்கூட தேவனுக்கு முன்பாக மேன்மை பாராட்டவே முடியாது!!

ஆகவே, நாம் யாவரிடத்திலும் இரக்கமாகவே இருந்திடக் கடவோம்! குறிப்பாய், வாழ்க்கையின் போராட்டத்தில் உழன்று தோல்வி அடைந்தவர்களிடத்தில் மிகுந்த இரக்கமாய் இருக்கக்கடவோம்! ஏனெனில் **நாமும்** ஏராளம் தோல்விகளைச் சந்தித்து.... தேவனிடமிருந்து ஏராளமான கிருபையைப் பெற்றிருக்கிறோமே!!

நான் கடைசியாக, இயேசுவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் கூறிக் கொள்வது யாதெனில் : நீங்கள் எந்த நிலையில் இருந்தாலும், அந்த நிலையில்! இப்பொழுதே! நல்லதோர் துவக்கத்தைத் துவங்கி, உங்கள் வாழ்க்கையில் தேவன் கொண்ட பூரண திட்டத்தை நீங்கள் நிச்சயமாய் நிறைவேற்றிடமுடியும்!! என்பதேயாகும்.

இருப்பினும் நாளையும் நீங்கள் தோல்வி அடைந்தால்.... **மனந்திரும்பிய இருதயத்துடன் உடனடியாகத் தேவனிடத்தில் செல்லுங்கள்! அவர் மீண்டுமாய் உங்களை நீதியாக்குவார்!!**

இந்தச் சுவிசேஷம் உங்களுக்குள் பூரணகிரியை செய்ய முடியாதென ஒருபோதும் சொல்லிவிடாதிருங்கள்! அவ்வாறு நீங்கள் சொல்வதற்கு சோதிக்கப்பட்டால் அதற்கு ஒரே காரணம்.... இத்தனை காலமும், கள்ளப் போதகர்களும், சட்டத்திட்டபிரமாண பிரசங்கிகளும், பிசாசும் கூறியவைகளை நீங்கள் கேட்டுக்கொண்டிருந்தபடியால் ஏற்பட்ட விளைவேயென திட்டமாய் நான் கூறிடமுடியும். இனியும் இது போன்ற வர்களைக் கவனித்துக் கேட்காதிருங்கள்! இவர்களின் புத்தகங்களை வாசிப்பதையும் நிறுத்துங்கள்! இன்றிலிருந்து தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்குமே செவிகொடுங்கள்! தேவனுடைய வார்த்தை சொல்வது எதுவோ அதை மாத்திரமே அறிக்கை செய்யுங்கள்!!

ஆம், சோதனையின் வேளையில் **உங்கள் விசுவாசம் ஒழிந்து போகாதிருக்கக்கடவது!**

நம் ஆண்டவர், நம் ஒவ்வொருவருக்காகவும் செய்வது போலவே, நாமும் ஒருவருக்கொருவர் ஜெபம் செய்திடக்கடவோம்!!

ஆமென்! ஆமென்!!

## 〈2〉

## *தோல்வியின் பாதையில் ஜெயத்தின் கெம்பீரம்*

**பா**வம் செய்துவிட்டேனே! தேவனைத் துக்கப் படுத்திவிட்டேனே! என்றெல்லாம் தங்கள் கடந்தகால வாழ்க்கையின் சில சம்பவங்களை அநேக சகோதர சகோதரிகள் எண்ணி எண்ணி, இனியும் தேவன் தங்கள் வாழ்விற்காக வரைந்திருக்கும் திட்டத்தை நிறைவேற்றிட முடியாது என முடிவு செய்கிறார்கள்.

இதுபோன்ற நிலையில் நாம் நம் சுயபுத்தியையோ அல்லது 'காரியம் இப்படித்தான்' என சாதிக்கும் நம் உணர்வுகளையோ சார்ந்து கொள்ள வேண்டாம். மாறாக, பொய்யுரையா வேதவாக்கியங்கள் என்ன கூறுகிறது என்பதையே காண்போமாக!

முதலாவதாக சத்திய வேதம் எவ்வாறு துவங்குகிறது என்பதை சற்றே கவனித்துப் பாருங்கள். "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி.1:1). இவ்வாறு ஆதியில் தேவன் சிருஷ்டித்த வானமும் பூமியும் பழுதற்ற பூரணமுள்ளதாகத்தான் இருந்திருக்கவேண்டும். ஏனெனில் தேவனுடைய கரத்திலிருந்து பூரணமில்லாத அல்லது அரை குறையான எந்தக் கிரியையும் தோன்றுவதே இல்லை. இருப்பினும் ஏசாயா. 14:11-15, எசேக்கியேல். 28:13-18 ஆகிய வசனங்கள் நமக்கு அறிவிக்கிறபடி, தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு பங்கு தூதர்கள் வீழ்ச்சியுற்றார்கள் எனக் காண்கிறோம். இதன் விளைவாகத்தான் "பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையும் . . . ஆழத்தின்மேல் இருளுமாய்" மாறிவிட்டது (ஆதி.1:2).

இவ்வித குழப்பமான நிலையிலும் வல்லதேவன் ஒழுங்கற்றிருந்த வெறுமையும் இருளுமான பூமியின் மீது கிரியை நடப்பித்து அதை அற்புதமாய் அழகாக்கி

விட்டார். இவ்வாறு, அழகாய் சீரமைக்கப்பட்ட உலகைக் கண்ட தேவன் "மிகவும் நன்றாய் இருக்கிறது!" என முடிவில் கூறினார் (ஆதி.1:31). இந்த அற்புத மாறுதலுக்குக் காரணம் : 1) தேவ ஆவியானவர் பூமியின் மீது அசைவாடினதும் 2) தேவனுடைய வாயிலிருந்து வார்த்தை உண்டானதுமே காரணமாகும். இதிலிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் செய்தி யாது? நாம் எவ்வளவுதான் நம் ஜீவியத்தில் தோல்வியடைந்து அல்லது எவ்வளவுதான் 'தாறுமாறு' நடந்ததுபோல் காணப்பட்டாலும் 'இன்னமும்' தேவன் நம் ஜீவியத்தை மகிமையுள்ளதாக்க முடியும் என்பதே, இன்று தேவன் நம்மோடு பேசும் நம்பிக்கையின் செய்தியாகும்!

ஆதியில் தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தபோது ஓர் பூரண திட்டத்தை வைத்திருந்தார். ஆனால் லூசிபரின் வீழ்ச்சியினிமித்தம் தேவன் தன் திட்டத்தை தள்ளிவைக்க வேண்டியதாயிற்று.

**இருப்பினும் சீர்குலைந்திருந்த வானத்தையும் பூமியையும் தேவன் சீர்ப்படுத்தி அவைகளை "மிகவும் நன்றாய் இருக்கும்படி" செய்து விட்டார்!**

ஆதியில் நிகழ்ந்த இந்நிகழ்ச்சிக்குப் பின்பு நடந்த சம்பவத்தையும் கவனித்துப் பாருங்கள். மீண்டும் ஓர் நல்ல துவக்கத்திற்காக தேவன் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்தார். அவர்களுக்காகவும் தேவன் ஓர் பூரண திட்டத்தை வகுத்திருந்தார். அப்பூரண திட்டத்தில் விலக்கப்பட்ட கனியை அவர்கள் புசிப்பது அடங்கியிருக்கவில்லை என்பது வெளிப்படையாகவே புலனாகிறது. ஆனால் அவர்களோ தேவன் கட்டளையிட்டு விலக்கி வைத்திருந்த நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்து, அவர்களுக்காக தேவன் உருவாக்கி வைத்திருந்த 'ஏதோ ஒரு அற்புதமான திட்டத்தை' சீர்குலைத்துப் போட்டார்கள். இவ்வாறு தர்க்கரீதியாகப் புரிந்துகொண்ட நாம், "இனிமேல் ஆதாம் - ஏவாள் தேவனுடைய பூரணதிட்டத்தை நிறைவேற்றிட முடியாது!" என்றே நினைக்கிறோம். இவ்வாறு நம் தர்க்க ரீதியாகவே காரியம் நடந்திருக்குமென்றால், ஆதாமையும் ஏவாளையும் சந்திக்கும்படி தேவன் ஏதேன் தோட்டத்திற்கு வந்தபோது, "இனிமேல் நீங்கள் என் முதல்தரமான திட்டத்தின்படி அல்லாமல் இரண்டாம் தரமான திட்டத்தின்படிதான் வாழவேண்டும்!!" என கூறியிருக்க வேண்டும்! ஆனால் அவரோ அப்படிக் கூறவேயில்லை!! மாறாக, "ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்குவார்!" (ஆதி.3:15) என்ற அற்புத வாக்குத்தத்தத்தையே அவர்களுக்கு உடனடியாக தயக்கமின்றி உரைத்தார். உலகத்தின் பாவங்களுக்காக கிறிஸ்து மரிப்பதும்; கல்வாரி சிலுவையில் கிறிஸ்து சாத்தானை மேற்கொண்டு ஜெயிப்பதுமாகிய இந்த வாக்குத்தத்தம் ஏற்கனவே தேவன் வைத்திருந்த சம்பூர்ண திட்டத்தின் ஒரு பகுதியே ஆகும்!!

இதுவரை சொல்லப்பட்ட சத்தியத்தின் சாரத்தை உங்கள் காரண

யுக்தியின்படி சிந்தித்துப் பாருங்கள். நித்திய நித்திய காலமாய் இருந்து வரும் தேவனுடைய சம்பூர்ண திட்டத்திற்குள் "கிறிஸ்துவின் மரணம்" இடம் பெற்றிருந்ததை நாம் யாவருமே அறிந்திருக்கிறோம். இதைத் தெளிவுபடுத்தும்படி வெளி.13:8, "உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி" எனக் கூறுகிறது. இவ்வாறிருந்தும், ஆதாமும் ஏவாளும் பாவம் செய்து தங்கள் தேவனுக்கு முன்பாய் வீழ்ச்சியடைந்ததினிமித்தமே கிறிஸ்து மரித்தார் என்பதையும் அறிந்திருக்கிறோம். ஆகவே, நம் தர்க்கரீதிப்படி, கிறிஸ்து அனுப்பப்பட்டு, உலகத்தின் பாவங்களுக்கு மரிக்கவேண்டும் என்ற தேவனுடைய சம்பூர்ண திட்டம் "ஆதாம் வீழ்ச்சியுற்றதாலேயே" நிறைவேறியது என நினைக்கிறோம்! மேலும், "ஆதாமின் பாவத்திற்காகத்தான் இயேசு மரித்தார்" என்றில்லாவிட்டால் கல்வாரியில் வெளிப்பட்ட தேவ அன்பை நாம் ருசித்திருக்க முடியாது எனவும் தர்க்கரீதியாக நினைக்கிறோம். ஆனால், "தேவனுடைய சம்பூர்ண திட்டம்" என்ற இந்த அற்புத சத்தியம் தர்க்கரீதியானதல்ல! எனவேதான் நம் பொன்னான வேதவாக்கியம் "**உன் சுயபுத்தியின்மேல் சாயாமல்**" (நீதி.3:5) என அருமையாய் போதிக்கிறது.

தேவன் கணிதப்புள்ளி விபரத்தோடு தர்க்கரீதியாய் செயல் பட்டிருந்தால், கிறிஸ்து இப்பூமிக்கு வந்தது தேவனுடைய இரண்டாம் தரமான திட்டமாகவே கருதப்படவேண்டும். ஆனால் நாம் அப்படி யெல்லாம் கருதினால் அது தேவ தூஷணமாய் இருக்கும். கிறிஸ்து இப்பூமிக்கு வந்தது, தேவன் மனுஷனுக்காக வரைந்திருந்த சம்பூர்ணத் திட்டத்தின் ஒரு பகுதியேயாகும். தேவன் ஒருக்காலும் பிழை செய்வதே கிடையாது! தேவன் சர்வவல்லமை உள்ளவராகவும்; ஆளுகை செய்ப வராகவும்; ஆதியிலிருந்து அந்தம் வரை தெரிந்தவராயும்; தன் அன்பின் மிகுதியால் நமக்காக எப்போதும் மவுனமாய் திட்டம் தீட்டுகிறவராயும் இருப்பதால்....

**அவர் நம்மோடு இடைபடும் காரியங்களை விளக்குவது மனுஷீக காரணயுக்திக்கு அப்பாற்பட்டதாகவே உள்ளது. தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல. அவருடைய சிந்தைகள் நம்முடைய சிந்தைகளும் அல்ல.**

இந்த வித்தியாசம் வானத்திற்கும் பூமிக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவாய் பெரியதாகும்! (ஏசாயா 55:8,9). ஆகவே நாம் தேவனுடைய வழிகளை ஆராய வேண்டுமென்றால் நம்முடைய புத்திசாலித்தனமான காரணயுக்திகளை நாம் தள்ளிவைத்துவிடுவதே நல்லது!

இவ்வாறாக, வேதாகமத்தின் முதல் பக்கத்திலிருந்தே நம்மோடு பேசும் "தேவசெய்தியை" விளங்கிக் கொண்டீர்களா? ஆம், **ஓர் தோல்வியுற்ற மனிதனை** தூக்கியெடுத்து அவன் மூலமாய் மகிமையான மகத்துவத்தை தேவன் செய்திட முடியும்! மேலும், அவனுடைய வாழ் விற்காக தேவன் தீட்டியிருந்த சம்பூர்ணத்திட்டத்தை அவன் நிறை வேற்றும்படி செய்யவும் தேவனால் முடியும்!! இதுவே வேதாகமத்தின் முதல் பக்கத்தின் மூலம் மனுஷனுக்கு தேவன் வழங்கும் முதல் செய்தியாகும்! இதை

நாம் யாவரும் ஒருபோதும் மறவாதிருப்போமாக.

**தன் வாழ்வில் திரும்பத் திரும்ப தோல்வியுறும் ஒரு மனிதனைக்கூட தேவன் தூக்கியெடுத்து தன்னுடைய சம்பூர்ணதிட்டத்தை அவன் நிறைவேற்றும்படி செய்திட தேவனால் கூடும். அவ்வாறு அந்த மனிதன் நிறைவேற்றப்போவது தேவனுடைய இரண்டாம் தரமான திட்டமல்ல... தேவனுடைய முதல் தரமான திட்டத்தையே நிறைவேற்றிவிடுவான்!**

இப்படியெல்லாம் தேவன் செய்திட முடிவதற்கு காரணம், தேவனுடைய பரிபூரண திட்டத்தில் அம்மனிதனுடைய தோல்வியும் அடங்கியிருக்கக்கூடும். அத்தோல்வி மூலம் அவர் அம்மனிதனுக்கு சில மறக்கமுடியாத பாடங்களைக் கற்றுத் தந்திருப்பார்!! இவைகள் எல்லாம் மனுஷீக தர்க்கரீதியாய் விளங்கிக்கொள்ள முயல்வது நம்மால் ஒருக்காலும் முடியாது! ஏனெனில் நாம் தேவனை அறிந்திருப்பதெல்லாம் மிகமிக கொஞ்சம்தான்!

நொறுங்குண்ட புருஷர்களையும், ஸ்திரீகளையும் மாத்திரமே தேவனால் உபயோகித்திட முடியும். திரும்பத் திரும்ப ஏற்படும் தோல்வியின் மூலமாக தேவன் நம்மை நொறுக்குவது அவருடைய ஆச்சரிய வழிகளில் ஒன்றாகும். முன்னின்று நடத்துபவர்களுக்காக (Leadership) அளிக்கப்படும் பயிற்சியில் தோல்வியென்ற பயிற்சியும் ஒன்றாகும்!

இன்று தேவ ஆசீர்வாதம்கூட ஒரு மனிதனை பெருமையடையச் செய்துவிடுகிறது! நாம் பெருமையினால் உப்பி விடாதபடி நம்மை தேவன் ஆசீர்வதிப்பது அவருக்கு ஓர் கடினப் பணியாகவே உள்ளது. ஒருவன் கோபத்திலிருந்து ஜெயம் பெற்று அதனிமித்தம் பெருமை கொண்டால், அவன் ஏற்கனவே இருந்த குழியைக்காட்டிலும் ஆழமான படுகுழிக்குள் வீழ்ச்சியுறுவான்!! எனவே நம்முடைய ஜெயத்திலும் தேவன் நம்மைத் தாழ்மையில் காத்துக்கொள்ள வேண்டியதாயிருக் கிறது! **பாவத்தின்மீது பெற்ற ஓர் உண்மையான வெற்றி எப்போதும் ஆழமான தாழ்மையை தன்னோடு கைகோர்த்துக் கொள்ளும்.** இது எப்படியெனில், திரும்பத்திரும்ப ஏற்பட்ட தோல்வியினால் அவனுடைய சுயநம்பிக்கை யாவும் அழிந்து, ஜெயம்பெற வேண்டுமென்றால் தேவனுடைய கிருபை இல்லாவிட்டால் ஒன்றும் முடியாது என்ற சரியான இடத்திற்கு இவன் வந்துவிட்டான்! இப்போது இந்த மனிதன் ஜெயம் பெற்றாலும் அந்த ஜெயத்தைக் குறித்து ஒருக்காலும்.... ஒருக்காலும் பெருமையினால் மார்தட்டிக் கொள்ளவே மாட்டான். மேலும் இவனே திரும்பத்திரும்ப தோல்வியுற்றபடியால், தோல்வியுறும் இன்னொரு சகோதரனைப் பார்த்து ஒருக்காலும் அற்பமாய் எண்ணிவிடவும் மாட்டான். மாறாக, தோல்வியடைந்த சகோதரனுக்காக மனம் பரிதவிப்பான்! ஏனென்றால் எண்ணற்ற பல தோல்விகள் மூலமாக தன்னுடைய மாம்சத்தின் பலவீனம் எவ்வளவாய் இருக்கிறது என்பதை இந்த மனிதன் நன்கு அறிந்து உணர்ந்துவிட்டான். “தானும் பலவீனமுள்ளவனானபடியினாலே,

*அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப்போனவர்களுக்கும் இரங்கத்தக்க வனாயிருக்கிறான்'' என எபிரெயர் 5:3 ரொம்பவும் சரியாக கூறுகிறது.*

*கொஞ்சம் பொறுங்கள்! இப்படியொரு செய்தியைக் கேட்டவுடன் தர்க்கரீதியாக சாதிக்கும் மனிதர்கள் என்ன சொல்வார்கள் என்பதை சொல்லிவிடுகிறேன்!! "ஆகா..... காரியம் இப்படியா! எனக்கு நலமானதையே தேவன் தரும்போது, இனி என்ன.... நான் தொடர்ந்து பாவம் செய்வது படுஜோர்தான்!!'' என குஷாலாகக் கூறுவார்கள். இவ்வாறு குஷாலாகக் கூறிக்கொள்ளும் மனுஷனுக்கு ரோமர் 3:7,8 கல்தெறித்தது போல் பதில் கூறுகிறது. அந்தப் பதிலையும் கேளுங்கள், "என் பொய்யினாலே தேவனுடைய சத்தியம் அவருக்கு மகிமை உண்டாக விளங்கின துண்டானால், இனி நான் பாவியென்று தீர்க்கப்படுவானேன்? நன்மை வரும்படிக்கு தீமை செய்வோமாக என்றும் சொல்லலாமல்லவா? எனக் கூறிக்கொள்ளும் மனுஷனே, அவ்வாறு கூறுகிற உன் மீது (அல்லது போதிக்கிறவர்கள் மீது) வரும் ஆக்கினை நீதியாய் இருக்கும்'' என மிகுந்த எச்சரிப்பாய் பதில் கூறுகிறது. ஆம், நலமானது கிட்டுவதற்காக நாம் பாவம் செய்யலாம் என நாம் ஒருபோதும் பிரசங்கிப்பதில்லை. அல்லது தேவனுடைய கிருபையை சாதகமாக்கிக் கொண்டு அவருக்குக் கீழ்ப்படியாமல் இருக்கலாம் எனவும்..... கீழ்ப்படியாமையில் விதைத்த அறுவடைக்கு நம்மை தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் நாம் இங்கு கூறவில்லை! நிச்சயமாய் அப்படியில்லை!!*

*ஆனால் இங்கே நாம் கூறியதெல்லாம், "தோல்வியுற்ற ஓர் மனுஷனுக்கு தேவன் காட்டும் அளவற்ற கிருபையை மனுஷீக தர்க்கரீதியில் ஒருவன் அறிந்துகொள்ள முடியாது'' என்பதையே வலியுறுத்திக் கூறுகிறோம். ஓர் மனிதன் படுமோசமாய் வீழ்ச்சியுற்று 'திரும்பத்திரும்ப' தோல்வியடைந்தவனாய் இருந்தாலும் அவ்வித மனுஷனைக்கூட தன்னுடைய பரிபூரண சித்தத்திற்கு கொண்டு வந்து விட தேவனால் முடியும் - இந்த தேவனால் கூடாத காரியம் ஒன்றுமே இல்லை!*

**அவர் நடப்பிக்கும் இந்த அற்புத செயலுக்கு ஒரே ஒரு தடைதான் உண்டு . . . அது, அந்த மனுஷனுடைய அவிசுவாசமே!!**

*ஒருவேளை நீங்கள், "நான் ஒரு தடவையா இரண்டு தடவையா... எத்தனையோ தடவை தோல்வியுற்றவன். இவ்வித பரிதாபநிலை கொண்ட என்னை தேவன் தன்னுடைய பரிபூரணத் திட்டத்திற்குள் மீண்டும் கொண்டுவருவது ஒருக்காலும் முடியாது!'' எனக் கூறலாம்.* **அப்படியானால்** *உங்கள் கூற்றின்படியே தேவனால் ஒன்றும் செய்யக் கூடாததாகவே மாறிவிடும்! ஏனென்றால் தேவன் உங்கள் வாழ்வில் உங்களுக்காக செய்ய முடிபவைகளை உங்களால்* **விசுவாசிக்க முடியவில்லையே!** *ஆனால் இயேசுவோ, தேவன் நமக்கு என்ன செய்ய முடியும் எனக் கூறும்போது,*

*“நீங்கள் மாத்திரம் விசுவாசித்துவிட்டால்.... தேவனால் கூடாத காரியம் ஒன்றுமேயில்லை!” என்றல்லவா கூறினார். ஆம், வாழ்வின் எல்லா காரியங்களுக்கும், “உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது” (மத்தேயு 9:29) என்பதே தேவனுடைய மாறாத சட்டமாய் இருக்கிறது. நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும். ஏதோ ஒரு காரியத்தை தேவனால் செய்திட முடியாது என நீங்கள் விசுவாசித்தால் அது அப்படியே உங்களுக்கு செய்யப்படாமலே இருந்துவிடும்!*

*ஆனால் இதற்கு நேர்மாறான காரியத்தையோ நீங்கள் கிறிஸ்துவின் நியாயாஸ்தனத்திற்கு முன்பாக காண்பீர்கள். அங்கே உங்களைக் காட்டிலும் தன் வாழ்வில் பயங்கர தோல்வியுற்ற இன்னொரு விசுவாசி, தேவன் அம்மனுஷனுடைய வாழ்விற்காக வரைந்திருந்த பரிபூரணத் திட்டத்தை நிறைவேற்றி முடித்திருப்பதை அன்று காண்பீர்கள்! இந்த வினோத அற்புதம் எவ்வாறு நிகழ்ந்தது?*

**“சுக்கு-நூறாக உடைந்துபோன தன் ஜீவியத்தின் உடைந்த சிதறல்களைத் தேவன் பொறுக்கி எடுத்து அவைகளை மீண்டும் சேர்த்து வைத்து மிகவும் நன்றாய் இருக்கும்படி தேவனால் செய்திட முடியும்” என்பதை அந்த விசுவாசி விசுவாசித்தான் . . . அவ்வளவுதான்!**

*தேவன் உங்கள் வாழ்விற்காக வைத்திருந்த திட்டத்தை சீர்குலைத்த தெல்லாம் “திரும்பத்திரும்ப ஏற்பட்ட உங்கள் தோல்விகள் அல்ல.... மாறாக, உங்கள்* **அவிசுவாசமே** *அதற்குக் காரணம்!” என்ற உண்மையை நீங்கள் அந்நாளில் கண்டு கொள்ளும்போது அது எவ்வளவு பெரிய துயரமாயிருக்கும்!!*

*இந்த சத்தியத்தை கெட்டகுமாரனின் உவமையும் வலியுறுத்திக் கூறுகிறது. தன் ஊதாரித்தனத்தினால் பல ஆண்டுகளை வீணாக்கிப் போட்ட கெட்டகுமாரனுக்கு தேவன் (தகப்பன்) தன்னுடைய “மிக அருமையானதைக்”* (His Best) *கொடுத்தார். இதுவே சுவிசேஷத்தின் மகிமையான செய்தியாகும். இந்த நல்ல தேவன் ஒருவரையாகிலும் “மீட்புக்குரியவர்கள் அல்ல” என தள்ளிவைப்பதே இல்லை!*

*தன் திராட்சத் தோட்டத்திற்கு வீட்டெஜமான் வேலையாட்களை அமர்த்திய உவமையும் இந்த அருமையான சத்தியத்தையே எடுத்துக் கூறுகிறது (மத்தேயு 20:1-16). இந்த உவமையில், பிந்திப் பதினோராம் மணி வேளையில் வேலைக்கு அமர்த்தப்பட்ட வேலையாட்களுக்கே முதலாவதாக கூலி கிடைத்தது. பார்த்தீர்களா விந்தையை! இவர்கள் 12ல் 11 மணி நேரத்தை அதாவது 90 சதவீத தங்கள் வாழ்வை வீணாக்கிப் போட்டவர்கள்! ஆகிலும் எஞ்சியிருந்த தங்கள் வாழ்வு 10 சதவீதமே யானாலும் அந்த குறைந்த அளவில் தேவனுக்கென மகிமையான காரியத்தை அவர்களால் செய்துவிட முடிந்தது. தோல்வியினால் மனம் மடிந்திருக்கிற சகோதரனே! சகோதரியே! இந்த சத்தியம் உங்களுக்கு புதிய*

*தெம்பூட்டி ஊக்குவிக்கவில்லையா?!*

*"பிசாசின் கிரியைகளினால் ஏற்பட்டுவிட்ட எல்லா சிக்கல்களையும் தீர்ப்பதற்காகவே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்" என 1 யோவான் 3:8-ம் வசனத்தை விரிவாக்க வேதாகமம் அழகுபடக் கூறுகிறது. ஆம், நம் வாழ்வில் ஏற்பட்டுவிட்ட எல்லா முடிச்சுகளையும் அவிழ்ப்பதற்காகவே இயேசு வெளிப்பட்டார்! அது எப்படியெனில், நாம் எல்லோருமே பாலகப்பருவத்தில், நம் ஜீவியத்தை சீராக சுற்றப்பட்ட ஓர் அருமையான "நூல்பந்தைக்" கொண்டு ஆரம்பித்தோம். ஆனால் அநேக ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது இந்த நூல்பந்தில் ஆயிரக்கணக்கான "முடிச்சுகள்" விழுந்துவிட்டன. இவ்வாறு ஏற்பட்டுவிட்ட ஆயிரக் கணக்கான முடிச்சுகளை அவிழ்ப்பது எவ்வாறு சாத்தியமாகும்? என முழு நம்பிக்கையையும் இழந்துவிட்ட நிலையில் நீங்கள் காணப்படுகிறீர்கள். உங்கள் ஜீவியத்தை உற்று நோக்கும் பொழுதெல்லாம் மிகுந்த மனமடிவும் அதைரியமுமே உங்கள் உள்ளத்தைக் கவ்விக்கொள்கிறது. இப்போது சுவிசேஷத்தின் நற்செய்தியைக் கேளுங்கள்!* **'ஒன்றுகூட பாக்கி இல்லாமல்' ஒவ்வொரு முடிச்சுகளையும் அவிழ்ப்பதற்காகவே இயேசு உங்களிடம் வந்து விட்டார்!!** *"அதெல்லாம் முடியாது..." என்றா கூறுகிறீர்கள்? உங்கள் விசுவாசத்தின் படியே உங்களுக்கு ஆகக்கடவது! 'உங்களைப் பொருத்த வரையில்' அவைகள் முடியாததாகவே போய்விடும். ஆனால் ஆ, அதோ.... உங்கள் வாழ்வைக் காட்டிலும் படுதோல்வியுற்ற ஓர் சகோதரன், "ஆம், தேவன் தன் மகத்துவமான செயலை என் வாழ்வில் நிறைவேற்றிட முடியும் என நான் விசுவாசிக்கிறேன்" எனக்கூறுவது சங்கோசைபோல் காதில் தொனிக்கிறதே! அவனுக்கும் அவன் விசுவாசத்தின்படியே ஆகக்கடவது! ஆம், அவனுடைய வாழ்வில் தேவனுடைய சம்பூர்ணத் திட்டங்கள் யாவும் நிச்சயமாய் நிறைவேறிவிடும்!! அல்லேலூயா.*

*நடைமுறையான ஒரு நிகழ்ச்சியின் மூலம் கர்த்தர் தன்னுடைய வார்த்தையை எரேமியாவுக்கு உரைத்தார் (எரேமியா 18:1-6). எரேமியாவை ஓர் குயவன் வீட்டுக்குப் போகும்படி தேவன் கட்டளையிட்டார். அங்கு சென்ற எரேமியா அந்தக் குயவன் ஒரு மண்பாண்டத்தை செய்வதற்கு முயற்சித்து அதை வனைந்து கொண்டிருந்ததைக் கண்டான். ஆனால் அந்த மண்பாண்டமோ "அவன் கையிலே கெட்டுப்போயிற்று." அதோடு முற்றுப்புள்ளி இல்லை! அந்தக் குயவன் "தன் பார்வைக்குச் சரியாய் கண்டபடி அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான்!" இப்பொழுது தேவன் நேரடியாகத் திரும்பி உங்களைப் பார்த்துக் கேட்கிறார், "ஓ, ..............................! இந்தக் குயவன் செய்ததுபோல நான் உனக்குச் செய்யக் கூடாதோ?" (வசனம் 6). இந்த வசனத்தில் புள்ளிகள் வைக்கப்பட்ட இடத்தில் உங்கள் பெயரை எழுதிக்கொள்ளுங்கள். ஏனெனில், இந்தக் கேள்வியை மிகுந்த மனபரிதவிப்போடு தேவன் உங்களைப் பார்த்துதான் கேட்கிறார்.*

*நீங்கள் மாத்திரம் உங்கள் எல்லாத் தோல்விகளுக்காகவும் தேவனுக்கேற்ற ஆழ்ந்த துக்கம் கொண்டுவிடுங்கள்! நீங்கள் அப்படிச் செய்துவிட்டால், உங்கள் பாவங்கள் சிவேரென்று இரத்தாம்பர சிவப்பாய் இருந்தாலும், பழைய உடன்படிக்கையின் வாக்குப்படி அது உறைந்த மழையைப்போல் வெண்மையாகும் (ஏசாயா1:18)..... புதிய உடன்படிக்கையின் விந்தையான வாக்குப்படியோ தேவன் "உங்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி மீண்டும் நினைக்கக்கூட மாட்டார்!" (எபிரெயர் 8:12).*

*உங்களுடைய தவறுகளும் தோல்விகளும் எதுவாயிருந்தால் என்ன? நீங்கள் இன்னமும் தேவனுக்குள் ஓர் புதிய ஆரம்பத்தைத் துவங்க முடியும்.*

**"ஐயோ! இதுபோல் 1000-புதிய ஆரம்பங்கள் துவக்கி அவையத்தனையிலும் தோல்வி கண்டு விட்டேன்!" என்றா கூறுகிறீர்கள்? உங்களை அண்டிவரும் செய்தியைக் கேளுங்கள், "இன்றைக்கு நீங்கள் இன்னமும் 1001-வது புதிய ஆரம்பத்தைத் துவங்க முடியும்!"**

*உங்கள் பழுதடைந்த வாழ்வைக்கொண்டு மகிமையான காரியத்தைச் செய்திட தேவனால் கூடும்!! உங்கள் உயிர் உள்ளவரை..... நம்பிக்கையும் உண்டு!! ஆகவே தேவனை நம்பி சார்ந்து கொள்வதற்கு ஒருபோதும் தவறிவிடாதிருங்கள். அவர் தம்முடைய எண்ணற்ற பிள்ளைகளுக்கு அநேக அற்புதக் கிரியைகளைச் செய்ய முடியவில்லை. அதற்கெல்லாம் காரணம்* **கடந்த காலத்தின்** *அவர்களுடைய தோல்விகள் அல்ல.... மாறாக,* **இன்று** *அவர்கள் அவரை நம்பிச் சார்ந்து கொள்ளவில்லை என்பதே பரிதாபமான காரணமாகும்! ஆகவே நாம் யாவரும் "விசுவாசத்தில் வலிமை கொண்டு தேவனை மகிமைப்படுத்துவோமாக" (ரோமர் 4:21). இனிவரும் காலங்களில் எவைகளையெல்லாம் "கூடாதது" என்று நாம் கண்டோமோ அவைகளினிமித்தம் தேவனை முற்றிலும் நம்புவோமாக!*

*சிறியோரே! பெரியோரே!! சகல ஜனங்களே!! நீங்கள் மாத்திரம் உங்கள்* **தோல்விகளை ஒத்துக்கொண்டு** *உள்ளம் உடைய உங்களைத்* **தாழ்த்தி** *தேவனை நம்பிவிடுங்கள் . . . அதுபோதும்! நீங்கள் கடந்த காலங்களில் எவ்வளவு தோல்வி அடைந்திருந்தாலும் உங்களுக்கு நம்பிக்கை உண்டு! இவ்வாறு நாம் யாவரும் தோல்வியின் மூலமாய் சிறந்த பாடங்களைக் கற்றுக்கொண்டு தேவன் நம்முடைய ஜீவியத்தில் கொண்ட சம்பூர்ணத் திட்டத்தை நிறைவேற்றிட தீவிரம் கொள்வோமாக!!*

*இவ்வாறு காரியம் உங்களில் இனிதே நடந்தேறிவிட்டால், "படுதோல்வி அடைந்த ஓர் மனுஷடைய வாழ்க்கையில் தேவன் என்ன செய்திடமுடியும்!" என்பதற்கு நீங்களே சிறந்த மாதிரியாக மாறிவிடுவீர்கள்! வரும் காலங்களில் உள்ளவர்களுக்கு தேவன் மகிழ்ச்சியோடு உங்களை "ஓர் மாதிரியாகச்" சுட்டிக்காட்டுவார்!!*

*"கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங் காலங்களில்" தேவன்* **உங்கள் மூலமாக விளங்கச்செய்வார்!** *(எபேசியர் 2:6). அல்லேலூயா!!*

*ஆமென்! ஆமென்!!*